வக்கீல் அங்கிளின் நடவடிக்கைகளை அம்மாவிடம் சொல்லலாம் என்று மனதினுள் தோன்றினாலும், அவளின் இப்போதைய ஒரே நம்பிக்கை நட்சத்திரமாய் அவர் இருப்பதால் நம்புவாளோ இல்லையோ என்ற சந்தேகம் எனக்குள் இருந்தது. பெரும்பாலான நாட்களில் அவர்கள் ஒன்றாய்த்தானிருந்தார்கள். அவ்வப்போது என்னை பார்க்கும் போது மட்டும் கண்களில் எக்ஸ்ட்ரா வெளிச்சம் போட்டது போல மின்னும். அவரின் பார்வையின் அர்த்தமெனக்கு பழக்கமான ஒன்றுதான் என்பதை வெளிப்படுத்தாமல் குழந்தையாய் முகத்தை வைத்துக் கொள்வேன். அங்கிள் அதை அட்வாண்டேஜ் எடுத்து கொண்டு என்னையும், அம்மாவையும் ஒரு சேர அணைத்துக் கொண்டு “நானிருக்குறேண்டா உங்களுக்கு” என்று சொல்லி என்னை நெருக்கமாக அணைத்துக் கொள்வார். கிட்டத்தட்ட என் மார்பகங்கள் அவரோடு அழுத்தமாய் பிதுங்கும்படியான அணைப்பு அது. அம்மாவைப் பொறுத்தவரை அன்பை வெளிப்படுத்தும் செயலாகத் தெரியும். ஆனால் எனக்கு அந்த அணைப்பின் செய்தி புரியும்.

இவர்களிடையே என் வாலான அர்ஜுனைப் பற்றி சொல்ல மறந்தே போனேன். எப்போதும் என்னை பார்வையால் தொடர்பவன் கொஞ்சம் கொஞ்சமாய் முன்னேறி ஒரு நாள் வீட்டிற்கு நுழையும் போது ஹாலில் உட்கார்ந்திருந்தான். என்னைப் பார்த்த்தும் சட்டென எழுந்து, மீண்டும் என் முகத்தை பார்க்காமல் கீழேயே பார்த்தபடி நின்றான். எனக்கு கொஞ்சம் கோபமாய் வந்தது. “ம்ம்மீஈஈ” என்று கத்தியபடி உள்ளே போனேன். அம்மா கையில் ஜூஸ் க்ளாசுடன் வந்தாள். அம்மா அவனை கவனிக்கும் வித்த்தில் பெரும் மரியாதை இருந்தத்தை கவனித்தேன். அவன் அங்கிருந்த அத்தனை நேரமும் என் உடலெங்கும் அவன் பார்வையின் சூடு பரவிக் கொண்டேயிருந்தது. அவன் போனதும் அம்மா சொன்ன இன்னொரு விஷயம் என்னை சூடாக்கி கோபத்தின் உச்சிக்கே கொண்டு சென்றது.

# 18 நான்

ஆம் பெரிய ப்ரச்சனைதான். நானே இழுத்துவிட்டுக் கொண்டது. அவள் அப்படிச் செய்வாள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அவள் பெயர் நிவேதிதா. கரோலின் என்கிற வெள்ளைக்கார பெண் மூலம் அறிமுகமானவள். கரோலின் ஸ்பெயினில் ஒரு பத்திரிக்கைக்காரி. நிவேதிதாவும் ஒரு பத்திரிக்கைக்காரி என்று எனக்கு தெரியாது. கரோலின் சுவாரஸ்யமான பெண். எவ்வளவோ பெண்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் இவள் வித்யாசமானவளாயிருந்தாள்.

என்னுடன் உறவு கொள்ளும் போது மற்ற பெண்களைப் போல அவளுடய சோகத்தை சொல்லவில்லை. அல்லது அவளது வக்கிரங்களை வெளிப்படுத்தவில்லை. அவளின் ஒவ்வொரு மூவும் ரசனையோடு இருந்தது. அறைக்குள் வந்ததும் குளிக்க போய்விடுவாள் என்னையும் குளிக்கச் சொல்வாள். ரெட் ஒயினுக்கு ஆர்டர் சொல்லிவிட்டு, ‘‘உனக்கென்ன வேண்டும்?’’ என்று கேட்பாள். பெரும்பாலும் கஸ்டமர்களுடன் நான் குடிப்பதில்லை. அது பல சமயங்களில் சரி வராது என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். ஆனாலும் அவளுடன் மட்டுமென்றால் ஒயினை தேர்தெடுப்பேன். டிவியை ஆன் செய்து ஏதாவது இசை சம்பந்தப்பட்ட சேனலை ஆன் செய்துவிட்டு, அது கேட்டும் கேட்காத வண்ணம் ஒலியை அமைத்து, ஒயினை எடுத்து ஆளுக்கொரு கிளாஸில் ஊற்றி அவள் கிளாஸை நானும், என் க்ளாஸை அவளும் மாற்றி வைத்துக் கொண்டு ஊட்டிவிடுவாள். நடுநடுவே ஒயின் குடித்த உதடுகளோடு என்னை முத்தமிட ஆரம்பித்து, முதல் க்ளாஸ் ஒயின் முடியும் போது அவளின் முத்தத்தில் வேகம் அதிகரிக்கும். வேகமிருந்தாலும் அதில் வெறி இருக்காது. மெல்ல, என் கீழுதட்டை கவ்வி, தன் நாக்கை என் வாய்க்குள் விட்டு, என் நாக்கை அவளின் நாக்கால் உறவாட, இயல்பான சூடு உடலில் பரவி எங்களுக்குள் நடக்கும் செக்ஸ் ரைஸ் குக்கர் ப்ரெஷர் போல மெல்ல, மெல்ல ஏறி உச்சத்தில் வெளியேறும்

அந்த அனுபவத்தை அவளுடன் இருந்தால்தான் புரியும். என்னுடனான அனுபவம் அவளுக்கு எப்பவும் பிடிக்கும் என்பதால் எப்போது இந்தியா வந்தாலும் அவள் என்னை அழைக்காமல் இருக்க மாட்டாள். வேறு வேலை இருந்தாலும் நான் அதை தட்டிக் கழித்துவிட்டு வந்துவிடுவேன். ஏனென்றால் இவளிடம் தான் நான் செக்ஸை அனுபவிக்கிறேன் என்பது என் கணிப்பு.

அவள் ஒரு நாள் நிவேதிதாவுடன் வந்திருந்தாள். தன் தோழி எனவும், என்னைப் போன்ற ஆட்கள் இந்தியாவில் இருக்கிறார்கள் என்று சொன்ன போது அவள் நம்பவில்லை என்றும், அதனால்தான் உன்னை இங்கே வரச் சொன்னேன் என்றாள். அவள் என்னைப் பார்த்த விதத்தில் ஆச்சர்யமிருந்தது. இந்தியாவில் ஆண்களுக்கு பெண்களின் அருகாமை கிடைக்கவே அலைந்து கிடக்கும் நிலையில் பணம் கொடுத்து ஆணுடன் சல்லாபிக்கும் வாய்ப்பிருக்கிறவனை அவள் ஆச்சர்யமாய் பார்ப்பது ஒன்றும் அதிசயமில்லை. கரோலின் என்னுடன் உட்காரும் போது காட்டிய நெருக்கத்தை பார்த்து கூச்சப்பட்டாள். முகம் சிவந்தாள். எப்படி இந்த தொழிலுக்கு வந்தீர்கள்? இதை பற்றி என்ன நினைக்கிறீர்கள்? என்று கேள்விகளால் துளைத்தெடுத்தாள். எனக்கு அவளின் கேள்விகள் எரிச்சலாய் இருந்தது. கரோலினின் நண்பியாக இருந்ததால் வெளிக்காட்ட முடியவில்லை. அன்று டின்னர் முழுவதும் அவளின் கேள்விகளுக்கு பதில் சொல்லியே மாய்ந்து போனேன். அவளின் எல்லா கேள்விகளிலும் ஆச்சர்யம் கலந்திருந்தது. கிளம்பும் போது கரோலினை கட்டி அணைத்து விடைப் பெற்றவள் என்னையும் கட்டி அணைத்து விடைபெறும் போது அவள் உடலில் லேசான நடுக்கம் இருப்பதை உணர்ந்தேன். பட்டும் படாத ஒருவிதமான நாசூக்கான அணைப்பு. உள்ளுக்குள் மனசு அலைபாய்வதை உணர முடிந்தது.

அடுத்தடுத்த சந்திப்புகள் கரோலின் இல்லாமல் நடந்தது. ஏதாவது ஒரு நட்சத்திர ஓட்டலுக்கு வரச் சொல்லிவிட்டு, காபி ஷாப்பில் உட்கார்ந்து பேசிவிட்டு, மீண்டும் கிளம்புகையில் அதே நடுக்கத்துடனான அணைப்புடன் கிளம்பிவிடுவாள். போகும் போது எனக்கான பணமும் கொடுத்துவிட்டுத்தான் போவாள். அன்று அப்படித்தான் பணம் கொடுத்துவிட்டு கிளம்ப எத்தனிக்கையில் அவளின் கையில் பணத்தை திணித்து, ‘‘எனக்கு

வேண்டாம்'' என்றேன். அவள் புரியாமல் விழித்தாள். ''என் சர்வீஸை பயன்படுத்தாமல் பணம் வாங்குவது ஒரு மாதிரியாக இருக்கிறது அதனால் வேண்டாம்'' என்றேன். சட்டென பதட்ட்த்துடன்.. ''சாரி.. சாரி.. அப்படி எடுத்துக் கொள்ளாதே நீ.. எனக்காக வந்திருக்கிறாய்.. உன் நேரத்துக்கான பணத்தை கொடுப்பதுதான் நியாயம்'' என்றாள். நாம் மீண்டும் சிரித்தபடி அவளின் பேக்கில் பணத்தை வைத்தேன்.

''மேபி சம் அதர் டே.. எனக்கு இன்னமும் தைரியம் வரவில்லை''

''இப் யூ டோண்ட் மைண்ட்.. ஆர் யூ வர்ஜின்?''

சட்டென கண்களை விரித்து என்னைப் பார்த்தபடி ''இல்லை.. பட்.. உன் போன்ற ஆட்களுடன் இதுவரை இல்லை. ஆனால் உள்ளுக்குள் ஆர்வம் எழத்தான் செய்கிறது. முடியத்தான் மாட்டேன் என்கிறது மனம்'' என்றாள். அவள் பேசி முடிக்கும் போது அவளின் வார்த்தைகளில் பெரும் தடுமாற்றம் இருந்தது. அவளுள் இருக்கும் பதட்டம் எனக்கு பாவமாய் இருந்தது. காபி ஷாப்பென பாராமல் சட்டென அவளை அணைத்து உதடுகளில் முத்தமிட்டேன். அவள் விதிர்த்து விலகாமல், நடுக்கத்துடன் என் உதடுகளை தேடினாள். அடுத்த சில நிமிடங்களில் நானும் அவளும் அந்த நட்சத்திர ஓட்டல் சூட்டில் தான் நின்றோம். ஸ்டார்டிங் ட்ரெபிள்தான் அவளுக்கு என்பது அடுத்த சில மணி நேரங்களில் தெரிந்தது. அன்று போகும் போது டபுள் மடங்காய் பணத்தை என் பாக்கெட்டில் வைத்துவிட்டு போனாள். பிறகு என்னை தொடர்பு கொள்ளவேயில்லை. எதையும் ஒரு முறை பார்க்கும் பார்ட்டியாய் இருக்குமென்று நான் மறந்திருந்த வேளையில் திடீரென ஒரு நாள் என் வீட்டிற்கு போலீஸ் வந்தது. எனக்கு ஒன்றும் புரியவில்லை. அய்யா வரச் சொன்னதாக சொல்லி வேறேதும் கூறாமல் ஜீப்பில் அழைத்துப் போனார்கள். ஸ்டேஷன் போனதும் தான் தெரிந்தது ப்ரச்சனை என்னவென்று. அங்கே நிவேதிதா இருந்தாள். கூடவே இன்னும் இரண்டு பேர் உட்கார்ந்திருந்தார்கள். ஒன்றும் புரியாமல் நான் நிவேதிதாவையே பார்த்தேன். அவளை முறைப்பதைப் பார்த்த ஓர் கான்ஸ்டபிள் ''என்னாடா முறைப்பு..'' என்று என் பின்னந்தலையில் ஓங்கி ஒரு அடி அடித்தார். கண்கள் எல்லாம் கிறு கிறுவென சுற்றி நின்றது போலிருந்தது. இது வரை நான் அடி வாங்கியதில்லை. நிவேதிதா ஒரு பதற்றத்தோடு என்னை நோக்கி ஓடி வர,

‘‘அம்மா.. நீங்க சும்மா உக்காருங்க. இந்த மாதிரி தேவிடியா பசங்களையெல்லாம் சும்மா விடக்கூடாது’’ என்று மேலும் ஒரு அடி அடிக்க கையை ஓங்க.. சட்டென விலகி ‘‘சார். எதுக்கு சார் அடிக்கிறீங்க?’’ என்றேன் சத்தமாய்.

‘‘ம்ம்ம்... அதை நான் சொல்றேன்’’ என்று எழுந்து வந்தார் இன்ஸ்பெக்டர். எங்கே அடிக்கப் போகிறாரோ என்று பயந்து பின்வாங்கினேன். ஆனால் அவர் அடிக்காமல் என் முன் தமிழில் வரும் ஒரு முக்கிய பத்திரிக்கையை போட்டார். அதில் என் சில்ஹவுட் படத்தோடு, காசுக்காக தன்னையே விற்கும் ஆண் விபசாரன்கள் என்று கொட்டை எழுத்தில் எழுதப்பட்டிருக்க, நிவேதிதா என்னிடம் கேட்ட கேள்விகள் எதற்காக என்று புரிந்தது. அவளை கோபத்துடன் பார்த்தேன். என்ன செய்வது என்றே புரியவில்லை. இத்தனை நாள் அக்காவுக்கு கூட தெரியாமல் இருந்த விஷயம் பேப்பரில் வந்துவிட்டிருக்கிறது. பதட்டமாய் இருந்தது. ‘‘என்ன நிவேதிதா இப்படி பண்ணிட்டீங்க?’’

‘‘சாரி.. பத்திரிக்கையில கட்டுரை வந்ததும், வாசகர்கள் கிட்டேயிருந்து பயங்கர ரெஸ்பான்ஸ். அதனால பத்திரிக்கை ஆசிரியர் நேர இதுக்கு ஆக்ஷன் எடுத்து அதை ரிப்போர்ட் பண்ணனும்னு சொல்லிட்டாரு வேற வழியில்லை’’ என்றாள் கையை பிசைந்து கொண்டே, அடுத்து என்ன செய்வது, யாரைக் கூப்பிடுவது, என்னை பிடித்தால் யாரெல்லாம் மாட்டுவார்கள், அரெஸ்ட் செய்வார்களா? இல்லை உள்ளே வைத்து அடிப்பார்களா? தப்பித்து ஓடி விடலாமா? என்றெல்லாம் கசகசவென யோசனைகளாய் மண்டைக்குள் ஓடிய வேளையில் எனக்கு சட்டென ஒரு முகம் நினைவுக்கு வந்தது. வசந்தி மேடம்.. உடன் அவளது நம்பரும் ஞாபகத்திற்கு வர, நிவேதிதாவை அணுக, கிட்டே போன போது ‘‘தம்பி.. கொஞ்சம் உக்கார்ரியா?’’ என்று கான்ஸ்டபிள் அதட்டினார். நான் பம்மிக் கொண்டு மரசேரில் உட்கார்ந்தேன். நிவேதிதாவுடன் வந்திருந்த இரண்டு பேரில் ஒருவர். என்னை வெறுப்புடன் பார்த்தபடி ‘‘சீ தீஸ் கெய்.. கொஞ்சமாவது குற்ற உணர்ச்சி இருக்கிறதான்னு பாருங்க..’’ என்று வெறுப்புடன் பேசினார்.

‘‘அட இவன் கூட படுத்தவளுக்கு இல்லாத குற்ற உணர்ச்சி ஆம்பளை இவனுக்கெங்க வந்திருங்க’’ என்று பெரிய ஜோக்கை சொன்னதைப் போல தானே ஃபீல் செய்து இன்ஸ்பெக்டர் சிரித்தார்.

‘‘ஆனாலும் பாருங்க.. அவனவன் இது கிடைக்காம ரேப்பு அது இதுன்னு ஆயிட்டிருக்கிற நேரத்தில காசும் கொடுத்து சுகமும் கிடைக்குதுன்னா மச்சம்தாண்டா.. உனக்கெல்லாம்’’ என்று டேபிளின் முன்னுக்கு வந்து என் தலையில் தட்டினார். சரியான் அடி. எதிர்பார்க்கவேயில்லை. அவர்களுக்கு என் மேல் கோபத்தை விட பொறாமை அதிகமாய் இருந்த்து அவர்களின் பார்வையிலேயே தெரிந்தது. இன்ஸ்பெக்டர் என்னுடன் படுத்த பெண்களைப் பற்றி கேட்கும் போது நிவேதிதா ஏதும் பேசாமல் வேறெங்கோ பார்த்துக் கொண்டிருந்தாள்.

‘‘சார்.. இதுல என்ன எழுதியிருக்குனு கூட எனக்கு தெரியாது. இந்த படத்தில இருக்கிறது நாந்தானு கூட சரியா தெரியலை.. அப்படியிருக்க என்னை ஏன் கூட்டிட்டு வந்தீங்க? அவங்க பத்திரிக்கைக்காரங்க என்ன வேணும்னாலும் எழுதுவாங்க.. அதுக்காக ப்ரூப் இல்லாமல் என்னை ஏன் அழைச்சுட்டு வ்ந்து அடிக்கிறீங்க?’’

’’பாருங்க சார்.. இவனெல்லாம் சட்டம் பேசுறான். என்னா பண்ணா தேவலை.. பொட்டச்சிங்களாயிருந்தா அட்லீஸ்ட் ஹோமுக்காவது அனுப்பலாம். இவனை எந்த செக்‌ஷன்ல கேஸ் போடுறதுன்னு யோசிச்சுத்தான் போடணும். வேணுமின்னா போன் செய்து ஆபாசமா பேசினான்னு கேஸ் போட்டு ஒரு மூணு மாசம் உள்ள தள்ளிரட்டுமா?’’ என்று நிவேதிதாவுடன் வந்தவர்களிடம் கேட்க, ‘‘சார்... நான் ஒரு போன் பண்ணிக்கணும்’’ என்றேன்.

’’என்ன லாயருக்கு போன் பண்ணப் போறியா?’’ என்றார் நக்கலாய்.

’’இந்தப் பசங்களை இந்தக் கேடு கெட்ட கலாச்சாரத்திலேர்ந்து காப்பாத்தணும் சார். அதைத்தான் எங்க வாசகர்களும் விரும்புறாங்க.. இத நாங்க ஒரு போட்டோ செஷனான பண்ணி போடப்போறோம். இந்த வாரம் இந்த நியூஸுக்கே பத்தாயிரம் காப்பி எக்ஸ்ட்ரா போயிருக்குன்னா பாத்துக்கங்க.’’ என்றார்.

இதற்குள் நான் என் செல்லை எடுத்து வசந்தி மேடத்திற்கு நம்பர் போட்டேன். ஹலோ என்ற என் குரலைக் கேட்ட்தும் மேடம் உற்சாகமாய் ‘‘புஜ்ஜிக் குட்டி.. என்னடா செல்லம் நீயே கூப்பிடுற. என் நினைப்பு வந்திருச்சா?’’ என்றாள் கொஞ்சலாய். நான் அவள் கொஞ்சலுக்கு பதில் சொல்லாமல் நடந்த

விஷயத்தை சொல்லி என்னை காப்பாற்றச் சொன்னேன். ஸ்டேஷன நம்பரையும் சொன்னேன். அரை மணி நேரத்தில் நீ வெளிய இருப்பே" என்று சொல்லிவிட்டு போனை வைத்தாள். அடுத்த பத்து நிமிடத்தில் நான் எந்தவிதமான கேசும் இல்லாமல் வெளியே வந்தேன்.

# 19 ஷர்மி

“பையன் ரொம்ப நல்ல பையனா இருக்கான். நீன்னா அவனுக்கு உசிருன்னான். பத்து நாளா அவன் தான் நம்ம வீட்டு செலவயெல்லாம் பாத்துக்கறான். பேசாம அவனை நீ கல்யாணம் பண்ணிக்கயேன்” என்றதைக் கேட்டுத்தான் எனக்கு கோபம் வந்தது.

“உனக்கு கொஞ்சமாச்சும் அறிவிருக்காம்மா.. என்னை பாத்ரூமில வச்சி ப்ரச்சனை பண்ணவனை நடுவீட்டுல கூட்டி வந்து உக்கார வச்சி, அவனோட காசுலதான் நான் ரெண்டு நாள் சாப்டேன்னு சொல்றியே. உன்னால எப்படிம்மா முடியுது?”

“இதையெல்லாம் யோசிச்சுத்தான் நாம தினம் வாழ்ந்திட்டிருக்கோமா?” என்ற அம்மாவின் முகத்தை பார்த்து ஏதும் பேசத் தோணவில்லை. அவள் கேட்பது ஞாயம்தான் என்றே தோன்றியது. அப்பாவின் நிலைக்கு பிறகு நடப்பதெல்லாம் எது எங்கள் விருப்பபடி நடக்கிறது? இல்லை இதற்கு முன்னால் தான் நடந்ததா? அதுவும் மாமாவின் ஆட்டத்திற்கு பிறகு இதைப் பற்றியெல்லாம் யோசிப்பதில் ஒரு விதமான குரூரத்தனமும், வக்கிரத்தனமும் இருப்பது போலக்கூட தோன்றியது. ஆனாலும் என்னை அவனுடன் சேர்த்து வைத்து பேசியது பிடிக்கவில்லை. ப்புகளில் கண்டவனோடு முயங்க இருக்கும் விருப்பம் கூட இவனிடம் ஏன் வர மாட்டேனென்கிறது என்று புரியவில்லை. அங்கே இருப்பவன் பணம் கொடுக்கிறவன் நான் என்ற திமிருடன் தான் என்னை அழைப்பான். ஒருவிதமான் ஆரகன்ஸ், டாமினெண்ட்ஸ், வல்லுறவுக்கான அழைப்பிருக்கும். அவனை சமாளிப்பதும், வெர்ஜினிட்டியை இன்னும் பொத்தி வைத்திருப்பதும் ஒரு விதமான சாகசமே என்று கூட தோன்றியது. ஒரு வேளை இவன் என்பின்னே பூஞ்சையாய் அலைவதால் அவனை அலைய வைக்கத் தோன்றுகிறதோ என்ற ஒரு எண்ணமும் தோன்றத்தான் செய்த்து.

இவன் பிரச்சனை பூதாகாரமாய் வெடிக்கும் என்று நாங்கள் யாருமே எதிர்பார்க்கவில்லை. வெடித்தது. முதலில் வெடித்த்து மாமாவின் மூலமாய். அம்மாவின் அன்றைய பேச்சுக்கு பிறகு  அர்ஜுனைப் பற்றி பெரிதாய் அலட்டிக் கொள்ளாமல் விட்டிருந்தேன். அவனின் ஆதிக்கம் என் வீட்டில் கொஞ்சம் கொஞ்சமாய் அவிழத் தொடங்கியிருக்க, மாமாவின் மூக்குக்கு அடியில் எரிச்சல் ஆரம்பமாகியிருந்தது. ஒரு நாள் வீட்டில் மாமாவுக்கும், அர்ஜுனுக்கும் உருண்டு பிரண்டு சண்டை. வீடே அல்லோலப்பட்டது. மாமா நன்றாக தண்ணியடித்திருந்தார். அர்ஜுன் மிக ஆக்ரோஷமாயிருந்தான். மாமவின் மூக்கிலும், அர்ஜுனின் தலையிலிருந்தும் ரத்தம் வந்து கொண்டிருந்தது. அம்மா ஏதும் பேசாமல் ஒரு மூலையில் அவர்களை அதிர்ச்சியோடு பாத்துக் கொண்டிருந்தாள். மாமாவின் அடி பெரியது என்று தோன்றியது.

''த்தா.. ஆத்தாளும் மகளும் ஓக்குறதுக்கு சின்னதா பையன் கிடைச்சதும் களட்டி விடுறீங்களா? த்தா.. அறுத்துப் போட்டுருவேன்.''

‘‘ச்சீ.. மாமா என்னா பேச்சு பேச்சு பேசுறீங்க?''

‘‘த்தூ.. நீ பேசாதடி.. ஊருல இருக்கிற பப்புல எல்லா ஊ..பிட்டு வர்றவதானடி. பெரிய பத்தினியாட்டம் நடிக்கிற?. உங்களுக்கு எவ்வளவு செஞ்சிருக்கேன். எத்தனை லட்சம் கொடுத்திருப்பேன். எவ்வளவு விசுவாசமா இருந்திருப்பேன். இப்போ என்னை விட பணக்காரனா ஒரு பையன் வந்தா அவனை வச்சிட்டு என்னை தாட்டி விடுவீங்களா? உசுரோட கொளுத்திருவேன். எல்லாரையும் கொளுத்திருவேன். தபாரு.. நாளைக்கு வருவேன் எனக்கு நீயும் உங்கம்மாளும் வேணும். இவன் இங்க இருக்கக்கூடாது. மீறி இருந்தா கொலைத்தான். ஆமா.. சொல்லிட்டேன்.'' என்று திரும்பத் திரும்பத் சொல்லி போதையில் கிளம்பினார். போகும் போது அவரின் எண்ணம் என்பதை என்னிடம் சொல்லிவிட்டேன் என்பதை புரிய வைத்த பார்வையை பார்த்துவிட்டு போனார். வீட்டில் ப்ப் விஷயமெல்லாம் பேச எனக்கு விருப்பமில்லாத்தால் அமைதியாய் இருந்தேன். அர்ஜுன் அப்படியே ஏதும் பேசாமல் உட்கார்ந்திருந்தான். கொஞ்சம் பார்க்க பாவமாயிருந்த்து. மெல்ல அவனிடம் போய் உட்கார்ந்தேன். சட்டென தள்ளி உட்கார்ந்தான்.

''உனக்கென்ன வேணும். என்கிட்ட, சொல்லு, லவ்... கல்யாணம், செக்ஸ்.. ?''

அவனிடமிருந்து பதில் இல்லை. ''நான் தான் உன்னை மதிக்கக்கூட மாட்டேன்குறேன் இல்லை ஏன் என் பின்னடியே சுத்துற?. இப்படி ப்ரச்சனையில மாட்டிக்கிற? நாளைக்கு உன் வீட்டுல இதனால பிரச்சனை வந்தா அதுக்கு காரணம் நாங்கத்தானு எல்லாரும் சொல்லுவாங்க. மாமா ரொம்ப வருஷமா வீட்டோட இருக்கிறவரு. ஆனால் நீ அப்படியில்லை''

அவன் ஏதும் பேசாமல் எழுந்து நின்றான். முடியவில்லை. அப்படியே சரிந்தான். போதையும், அடியும் அவனை வீக்காக்கியிருக்க வேண்டும். அம்மா என்னைப் பார்த்தாள். அவனை என் அறைக்குள் அழைத்துச் சென்று படுக்க வைத்தேன். இப்போது அவன் மேல் அருவருப்போ கோபமோ ஏன் வரவில்லை என்று என்னையே கேட்டுக் கொண்டேன். பதிலில்லை. அம்மா அதிர்ந்து போயிருந்தாள். அருகே போய் அவளை தொட்டு எழுப்பியதும் சத்தமில்லாமல் அழுதாள்.

``இப்படி பொம்பளையா பொறந்து இவனுங்க கிட்ட மாட்டிட்டு அவஸ்தை படறோமே?'' என்று உடைந்து அழுத போது குரல் காய்ந்துப் போய் புரியாமல் கேட்டது. ஏதுவும் பேசாமல் அவளை அறையில் தூக்க வைக்க மாத்திரைக் கொடுத்துவிட்டு, ஹாலில் வந்து உட்கார்ந்தேன்.

இந்த வீடும், இரண்டு பெண்களை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு ஆள ஆசைப்படும் ஆண்களின் வேகம் தான் எங்களை துரத்துகிறது என்று புரிந்தது. முழுக்க மூழ்காமல் முக்காடு போட வேண்டியதால் இவர்களை அண்டியிருக்க வேண்டியிருக்கிறது. போடா பொங்கிப் பசங்களா என்று ஒரு முறை திமிரிவிட்டால் பயந்துவிடுவார்கள் என்று கூட தோன்றியது. ஆனால் அதை எப்படி செய்வது என்று யோசிக்க வேண்டும். அதற்கு முக்கியமா எங்கள் செலவை நாங்களே பார்த்துக் கொள்ள வேண்டிய நிலைக்கு எங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். இனி அம்மாவிடம் மறைத்து பிரயோஜனமில்லை. அர்ஜுனை பற்றி ஒரு முடிவெடுத்தாக வேண்டும். இவன் பூஞ்சை. இவனுக்குள் நிச்சயம் காதலில்லை. அப்படியிருந்திருந்தால் என்னை அடைய என் வீட்டின் மூலம் அப்ரோச் செய்திருக்க மாட்டான். மாமாவின் இன்னொரு முகம். பணக்கார முகம். ஆளுமை முகம். மிகவும் டயர்டாக இருந்தது. அப்படியே கட்டிலில் சாய்ந்துவிட்டேன். எப்போது தூங்கினேன் என்றே தெரியவில்லை. திடீரென ஒரு மூச்சுக்காத்து என் முகத்தின் அருகில்

சூடாய் விழுந்த்தால் திடுக்கிட்டு விழித்தேன். அம்மா. என்னை அணைத்தபடி படுத்திருந்தாள். வெளியே நன்றாக விடிந்த்திருந்தது.

ஆனால் அன்றைய காலை எங்களுக்கு அப்படி விடியவில்லை. வரும் போதே மாமா போலீஸூடன் வந்திருந்தார். வந்த போலீஸை எனக்கு தெரியும். மாமாவின் அல்லக்கை. ‘‘எங்கடீ அவன்... எங்கடீ..’’ என்று எங்களைத் தாண்டி என் அறைக்குள் நேரே நுழைந்து அவனை அடித்து இழுத்து வந்தார். அர்ஜுன் தூக்கக் கலக்கத்தில் ஏதுவும் புரியாமல் விதிர்த்துக் கொண்டே பின் வர, ஹாலில் எங்களைப் பார்த்ததும் புரிந்து, மாமாவிடமிருந்து விலகி, ‘‘என்ன.. என்ன பிரச்சனை? யார் வேண்டும் உங்களுக்கு?’’ என்று வந்திருந்த போலீஸிடம் கேட்டான். அவன் குரலில் இருந்த ஆளுமையான தோரணையை இதுவரை நான் கேட்டதில்லை.

‘‘தம்பி.. நீங்களா? அப்பா சௌக்கியங்களா?’’

’’ம்ம்.. என்ன விஷயம்?’’

’’ஒண்ணுமில்லை தம்பி. சார் நம்ம ப்ரெண்டு ஏதோ ப்ரச்சனைன்னு சொன்னாரு.. நான் பார்த்துக்கறேன் தம்பி. வாங்க.. ‘‘ என்று மாமாவை தள்ளிக் கொண்டு போனார். மாமா ஒன்றும் புரியாமல் அவருடன் நகர, அர்ஜுன் சொடக்கு போட்டு அவரைக் கூப்பிட்டான். இன்ஸ்பெக்டர் சட்டென நின்றான்.

‘‘எங்க ப்ராப்ளம் கொஞ்சம் ப்ர்சனல். இனிமே இன்வால்வ் ஆக வேண்டாம்னு சொல்லிடு. நான் பார்த்து முடிச்சிக்கிறேன்.’’ என்று பையிலிருந்து ரெண்டு ஆயிரம் ரூபாய் நோட்டுக்களை எடுத்து அருகே போய், மாமாவைவின் அருகில் போய் நின்று பார்த்தபடி அவரின் பையில் வைத்தான். மாமா தலை குனிந்தார். ‘‘இருந்தாலும் நேத்து நீ நல்லாத்தான் சண்டைப் போட்டய்யா’’ என்று நக்கலாய் சிரித்தபடி, சட்டென எதிர்பாராமல் அவர் மூக்கின் மேல் குத்தினான். பொலக்கென ஒரு சத்தம் வந்தது. மாமா முகத்தை மூடி அப்படியே உட்கார்ந்தார். சத்தமேயில்லை. இன்ஸ்பெக்டர் மாமாவை தரதரவென இழுத்துப் போனார். எனக்கு அதிர்ச்சியாய் இருந்தது. மெல்ல அருகே வந்தான். என்னை முழுக்க, ஏற் இறங்க பார்த்தான். நன்றாக மூச்சிழுத்தான்.

’’தோ பார்.. நீ எனக்கு வேணும். இனி காத்திருக்க மாட்டேன். ஒரு வாட்டி. அன்னைக்கு நான் அடைஞ்ச அவமானத்துக்கு பதிலா. உன்னை பஞ்ச்

பண்ணியே தீரணும். அந்தக் கிழக்கூதி தொந்தரவு இல்லாமல் நிம்மதியா நீ செட்டிலாகணுமின்னா நான் சொல்றத கேட்டா நம்ம ரெண்டு பேருக்கும் நல்லது. நாளைக்கு வர்றேன். புல் செட்டில்மெண்டோட.. ஒன்டைம் செட்டில்மெண்ட். ஓகே கண்ணு.. என்னடா இது சினிமா சீன் போல இருக்கேன்னு யோசிக்கிறியா? நான் கொஞ்சம் அப்படித்தான். வர்றேன்.' என்று சொல்லிவிட்டு அவன் வெளியேறினான். அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு பெண்ணாய் என்னால் என்ன செய்ய முடியுமென புரியாமல் நின்ற இடமிது. யோசிக்க ஆரம்பித்தேன்.

# 20 நான்

ஸ்டேஷனை விட்டு வந்ததுமே வசந்தி மேடத்திடமிருந்து போன் வந்தது. ‘‘செல்லம் வந்திட்ட இல்லை. மேல கை வச்சானுவளா? பேர் சொல்லு அவனை உண்டு இல்லைன்னு பண்ணிடறேன்’’. நான் இல்லையென்றேன். ஒரே ஒரு போனில் காரியத்தை முடித்துவிட்டோமே என்ற திமிர் கொஞ்சம் அதிகமாய் உள்ளாடியது. வசந்திக்கு பவர் ஜாஸ்தி. கமிஷனரின் பெண்டாட்டி. எனக்கு இவ்வளவு தூரம் தொடர்பிருக்கும் என்று நிவேதிதா இல்லை யாராலும் நினைத்து பார்த்திருக்க முடியாது. ஒரு ஆறு மாதத்திற்கு முன் எனக்கே தெரியாது. வசந்தி மேடம் கமிஷனர் பெண்டாட்டி என.

மகாபலிபுரத்தில் ஒரு கெஸ்ட் அவுஸில் சோளக்கொள்ளை பொம்மைப் போல ஒரு ஹவுஸ் கோட்டோடு என்னை வரச் சொல்லிப் பார்த்தாள். முழு போதையில் இருந்தாள். இது போல் வரச்சொல்லி யாரும் பார்த்ததில்லை. என் ஏஜெண்ட் எனக்கு போன் பண்ணும் போதே ’’ஹை ப்ரோபைல் பார்ட்டி பார்த்து நடந்துக்கோ. வேணாம்னா வந்திரு’’ என்று சொன்னான். என் பின்னணி பற்றிக் கேட்டாள். ‘‘எத்தனைப் பேரை ...ருப்பே?’’ என்று கேட்டவளின் முகத்தை நேராகப் பார்த்து சிரித்தேன். ‘‘கணக்கு வச்சிக்கல?’’ என்று அவளே பதில் சொல்லிச் சிரித்தாள். ‘‘உன் சிரிப்பு எனக்கு பிடிக்குது செல்லம். சொன்னது எல்லாத்தையும் செய்வே இல்லை. அப்புறம் அது பண்ண மாட்டேன் இது பண்ணமாட்டேன்னு சொல்லக்கூடாது என்னா?’’. அப்படி என்ன புதுசாய் செய்யச் சொல்லப் போகிறாள் என்று யோசித்தேன். நான் அமைதியாய் இருந்ததை பார்த்து ஓகே சொன்னதாய் புரிந்து கொண்டு உள்ளே வரச் சொன்னாள். நான் நினைத்தைப் போல் ஏதும் புதுசாய் இல்லை. எல்லாம் வழக்கம் போல் தான். ஆனால் அவளுக்கு அது புதுசு. ஆனால் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நான் அவள் சொல்வதை கேட்டு செய்பவனைப் போல செயல்பட்டதால் அவள் சீக்கிரமே எக்ஸ்டசியினால் உச்சத்தை

அடைந்து, உச்சப்பட்ச காமத்தில் மிதந்தாள். அவள் உடலின் அதிசயங்களை அவளுக்கே காட்டியதில் திளைக்க ஆரம்பித்தாள். அவள் சொன்னபடி கேட்க வேண்டுமென்றவள் இப்போது நான் சொல்வதை எல்லாம் கேட்க ஆரம்பித்தாள். எனக்காக என்ன வேண்டுமென்றாலும் செய்ய தயாராக இருப்பவள். வெள்ளிக்கிழமைகளில் மேடத்தை பார்த்தால் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்காமல் போக மாட்டீர்கள். அப்படி ஒரு ஜாஜ்வல்லியமாய் இருப்பாள். உன்னோட இருந்தா என் வயசு எனக்கு தெரிய மாட்டேன்குது என்று அடிக்கடி சொல்லிக் கொண்டேயிருப்பாள். ஒரு கட்டத்தில் என்னை அவளுடனேயே இருக்க வேண்டுமென்று எதிர்பார்த்த போதுதான் இது சரி வராது என்று அவளிடமிருந்து விலக ஆரம்பித்தேன். வெளியூருக்கு போவதாய் சொல்லிவிட்டு விலக, அங்கே போனா என்ன காசு கிடைக்குமோ அதை உனக்கு தர்றேன் என்றாள். ஒத்துகிட்டா போய்த்தான் தீரணும் என்று சொல்லி விலகி சில மாதங்களாய் இருந்த நிலையில்தான் இந்தப் பிரச்சனைக்காக பேச வேண்டியதாகிவிட்டது. அநேகமாய் திரும்பக் கூப்பிடுவாள். வழியில்லை போய்த்தான் ஆக வேண்டும். மீண்டும் என்றாவது உதவுவாள். எதிர்பார்த்தபடியே கூப்பிட்டாள். போனேன். முன்பை விட துவண்டிருந்தாள். நன்றி சொன்னேன். அதெல்லாம் வேணாம். இறுக்க அணைச்சு ஒரு உம்மா தா என்று சிரித்தாள்.

கொஞ்சம் நாள் வெளி வேலைக்கு போகாமல் இருந்தேன். ஆனால் எத்தனை நாள் இப்படி இருக்கப் போகிறேன் என்று புரியாமல் தான் இருந்தேன். சமயங்களில் ஏதாவது வேலைக்கு போகலாமா? என்று தோன்றினாலும் இத்தனை நாள் நோகாமல் நோம்பு கும்பிட்டு சம்பாதித்துக் கொண்டிருந்த என்னால் வேலைக்கு போய் சம்பாரிக்க முடியுமா என்ற சந்தேகம் எழுந்து கொண்டேத்தான் இருந்த்து. இப்போது செய்யும் வேலை கூட உழைப்புத்தான் என்றாலும் சொல்லிக் கொள்ள முடியாத உழைப்பு என்ற எண்ணம் வராமல் இல்லை. ஆனால் என்னால் வேலைக்கு எல்லாம் போக முடியாது என்பது திட்டவட்டமாய் புரிந்த்து. சீக்கிரம் இதில் நன்றாக சம்பாதித்து செட்டிலாக வேண்டும் என்ற எண்ணம் மட்டும் மனதினுள் ஓடிக் கொண்டேயிருந்த்து.

ஏஜெண்டுகளின் தொடர் போன்கள் வேறு என்னை அரித்துக் கொண்டிருக்க, மீண்டும் என் வேலையை, உழைப்பை ஆரம்பித்தேன். சிரிக்காதீர்கள். என்

உழைப்பு உங்களுக்கு இவ்வளவு சொல்லியும் புரியவில்லை என்றால் நோ யூஸ்.

என்னுடைய முதல் காலே வித்யாசமான ஒரு அனுபவமாய் இருந்தது. ஒரு காலேஜ் பெண்ணுடன் பார்க்கில் நடக்கும் டிஸ்கோவுக்கு போய் வர வேண்டும். என்றார்கள். அவள் பெயர் ஜானகி. அவளின் தோழிகள் எல்லோரும் அவளை ஜானி என்று அழைத்தார்கள். காரில் என்னை பிக்கப் செய்யும் போதே "எனக்கு இதான் பர்ஸ்ட் டைம். என் தோழிகள் என்னை ஒரு சாமியாரினி என்று கிண்டல் செய்கிறார்கள். அவர்களின் வாயடைக்க, எனக்கு பாய் ப்ரெண்ட் இருப்பதாய் சொல்லிவிட்டேன். ஸோ.. அதை ஞாபகத்தில் வைத்துக் கொள். மற்றபடி என்னிடம் இதை வைத்து ஏதும் அட்வாண்டேஜ் எடுத்துக் கொள்ள வேண்டாம். நான் சொல்வது புரியும் என்று நினைக்கிறேன்" என்றாள் . நான் சிரித்தபடி தலையாட்டினேன். அன்றிரவு முழுவதும் அவளுடன் ஆடினேன், குடித்தேன். ஆனால் அவளை மிக நாசூக்காக அணுகினேன். ஒவ்வொரு முறை அவள் என் மீது படும் போதும் சாரி சொன்னேன். பரவாயில்லை.. பரவாயில்லை என்று சொல்லிக் கொண்டேயிருந்தாள். அந்தக்கூட்டத்தில் ஏற்கனவே இதற்கு முன் பார்த்த ஆண்டிகள் சில பேர் என்னை அடையாளம் கண்டாலும் கண்டு கொள்ளாமல் போனார்கள். நானும் தான். அதுதான் எங்களுக்கு பால பாடம். அவர்களாய் பேசும் வரை தெரிந்தது போல் காட்டிக் கொள்ளக்கூடாது. அன்றைக்கு இரவு ஜானகி என்னை ட்ராப் செய்யும் முன் என்னை அழுந்த முத்தமிட்டாள். முத்தமிட்டப்பின் அவள் முகத்தில் தெரிந்த வெட்கத்தை நான் எந்த பெண்ணிடமும் கண்டதேயில்லை. ஒரு முத்தத்திற்கே வெட்கப்பட்ட ஜானகி என்கிற ஜானி தான் என்னை க்ரூப் செக்ஸ் கும்பலுக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள். அந்த அளவிற்கு என்னுடனான முதல் அனுபவம் அவளை தயார் படுத்தியிருந்த்து.

அந்தக் கும்பல் முழுக்க முழுக்க, கல்லூரிப் பெண்களும், படித்து ஐடியில் வேலை பார்க்கும் பெண்களாய் இருந்தார்கள். பணம் என்பது அவர்களுக்கு ஒரு பொருட்டேயில்லை. நேரடியான தொடர்புகள் ஏற்கனவே ஏற்பட்டுள்ளதால் என்னையே மற்றவர்களையும் அரேஞ்ச் செய்யச் சொல்லிவிடுவார்கள். குறைந்தது மூன்றிலிருந்து நான்கு பேர். ஆறிலிருந்து ஏழு பெண்களுக்கு. சில சமயம் ஆறுக்கு ஆறு கூட போயிருக்கிறோம். இந்தக் குருப்பில்

புதியவர்களுக்கு அனுமதியில்லை. ஏற்கனவே கடைந்தெடுத்து தேர்ந்தவர்களே வருவார்கள். கொஞ்சமே கொஞ்சம் அனுபவம் உள்ளவர்களை எப்போதாவது தான் பார்க்க முடியும். ஆனால் அவர்களை பார்த்த மாத்திரத்திலேயே கண்டு பிடித்து விடலாம். லைட்டாக குடித்துவிட்டு, கொஞ்சம் தைரியம் வந்த பிறகு, மெல்ல மெல்ல உடைகளுக்கு நட்ட நடு ஹாலில் மற்றவர்கள் விடை கொடுக்க அரம்பிக்கும் போதே இவர்கள் புடவையை, துப்பட்டாவை மீண்டும், மீண்டும் எடுத்துப் போர்த்திக் கொள்வார்கள். கொஞ்சம் நேரத்தில் சுற்றியுள்ளவர்கள் எல்லாம் முழுதாய் விடுவித்திருக்க, இவள் மட்டும் உடையோடு இருப்பதைப் பார்த்துவிட்டு, அத்துனை நிர்வாணங்களும் அவள் மேல் பாய்ந்து உரித்தெடுப்பதுதான் ரேவ் பார்டிகளின் ரேகிங். ஒரு கட்டத்தில் அவள் ஓட, இவர்கள் நிர்வாணமாய் துரத்த, வந்திருக்கும் நம்ம பசங்க எல்லோரும் அதை பார்த்தபடி சும்மா நின்றிருப்பார்கள். கொஞ்சம் கொஞ்சமாய் அவளுக்கு நிர்வாணம் பழக, ஒரே நேரத்தில் ஆறு ஆணின் கைகளும் அவளின் உடலில் விளையாட, அதை பார்த்து மற்றவர்கள் உணர்வெழுச்சி கொள்ள, பின்பு யார் தடுத்தாலும் கேட்காத ஒரு வெறி அங்கே சூழ்ந்து கொள்ளும். வெட்கத்தை விட்டவள் நின்று விளையாடுவாள். குடியும், காமமும் சேர்ந்து ஒரு விதமான வெறி கொள்ள வைக்கும். மற்ற வேலையை விட இது மிகவும் மோசமானது. ஒருத்தி மாற்றி ஒருத்தி வந்து கொண்டேயிருப்பாள். இவர்களுக்குள் ஒரு மனத்தடை இருக்கும் வரை தான் கட்டுப்பாடு, வெட்கமெல்லாம். அதை விட்டொழித்தால் ஆணெல்லாம் வெறும் ஜுஜுபி.

முதல் சுற்று முடித்து சிறிது நேரம் பேசும் போது சில பேருடய கணவர்கள், பாய் ப்ரெண்டுகளின் உறுப்பைப் பற்றி, அவர்களின் செக்ஷுவல் அளவுகோல்களைப் பற்றியெல்லாம் சரியான கிண்டல் கேலியுடன் பேசுவார்கள். ”இவங்களுக்கு நாம மவுத்திங் பண்ண்ணுமாம். ஆனா நமக்கு கேட்டா பண்ண மாட்டாங்களாம். போடான்னுன்னு ஒரு வாட்டி ஒரல் பண்ணும் போது கடிச்சிட்டேன். ஆனா பாவம் துடிச்சிட்டான்.” என்றெல்லாம் பேசுவார்கள்.

உடன் வேலை செய்பவன் தன்னை மடக்க எப்படியெல்லாம் ஜொள்ளு விடுகிறான். இப்படியெல்லாம் பேசினா எனக்கு பிடிக்கதுன்னு சொல்லி எப்படி

சீன் போடுவார்கள் என்றெல்லாம் நடித்து காட்டுவார்கள். விடியற்காலை வரை குறைந்தது ஆளுக்கு மூன்று ரவுண்டுகளாவது போகும். எல்லாம் முடிந்து அரை போதையில், உடல் வதங்கி, துவண்டு தூங்குகையில் எவளாவது ஒருத்திக்கு மீண்டும் மூட் வந்து இரண்டு பேரின் லுல்லாவை வைத்து விளையாடும் போதுதான் எரிச்சல் எரிச்சலாய் வரும். அப்படி ஒரு க்ரூப் மேட்டரின் போதுதான் ஷர்மியை பார்த்தேன்.

# 21 ஷர்மி

“நாம எங்கயாவது ஓடிப்போயிருவோமா?” என்றாள் அம்மா. நான் சிரித்தேன். “யார்கிட்டேயிருந்து?” என்று கேட்டேன். அவளிடமிருந்து பதிலேயில்லை. துரத்துகிற நாய்க்காக ஓடாமல் ஒரு முறை திரும்பிப் நின்றால் நாய் துரத்தாது. பயந்து பின்வாங்கி, கொஞ்சம் தயங்கிய குரலில் குறைக்கும். அந்தக் குரலில் இருக்கும் தயக்கத்தை உணர்ந்து மீண்டும் ஸ்திரமாய் நின்றால் அது பின்வாங்கும். நாய்க்கு உபயோகிக்கும் யுக்திதான் மனுஷனுக்கும் என்று முடிவு செய்தேன். ஆனால் யோசிக்கும் போது இருக்கும் தைரியம் செயல்படுத்தும் போது இருக்குமா? என்று தெரியவில்லை. ஆனாலும் இந்த எண்ணம் கொஞ்சம் தைரியத்தை கொடுத்த்து. பொழுது விடியும் வரை தூங்கவேயில்லை. என்னதான் செக்ஷுவலாய் கொஞ்சம் அனுபவப்பட்டிருந்தாலும், என்னை இழக்கப் போகிறேன் என்று நினைக்கும் போது வருத்தமாய்த்தான் இருந்தது.

பொழுது விடிந்ததும் ஏதோ விதத்தில் தயாரானது போல பரபரவென குளித்தேன். குளித்து முடித்து நிர்வாணமாய் என் உடலை கண்ணாடியில் பார்த்தேன். இப்படி பார்த்து பல வருடங்கள் ஆகிவிட்டது என்று தோன்றியது. முன்பை விட மார்பகங்கள் பெருத்து திண்ணென்று இருந்தது. இரண்டு கைகளாலும் பிடித்துப் பார்த்தேன். ஆண்களின் பார்வை முதலில் விழும் இடம். கையை எடுத்தவுடன் ஜெல்லியைப் போல தளும்பியது. கொஞ்சம் கூட மடிப்பு விழாத இடுப்பு, நீண்ட கால்கள், தளராத தொடைகள். மழிக்கப்பட்ட கால்கள் என்று என்னைப் பார்க்க எனக்கே பிடித்திருந்தது. பின் ஏன் ஆண்களுக்கு பிடிக்காது? பெண் என்பவளின் உடல் மீதான கிரக்கம் ஏன் என்று என்னையேத் தள்ளி நின்று பார்க்கும் போது புரிந்தது. இருப்பதிலேயே எனக்கு பிடித்த உடையான மினி ஸ்கர்ட்டையும், ஒரு டைட்டான டாப்ஸையும் அணிந்து கொண்டேன். மணி பத்தாகியிருந்தது. வாசலில் அர்ஜுனின் கார் வந்து நின்ற சத்தம் கேட்டது. என் அறையிலிருந்து கீழிறங்கினேன். கதவைத்

திறந்துவிட்டேன். என்னையும் என் உடையையும் மேலும் கீழும் ஏற இறங்கப் பார்த்தான்.

‘‘தயாராக இருக்கிறாய் போல..’’ என்ற அவன் கண்கள் என் மார்பிலேயே நின்றது. நான் சிரித்தேன். அதை அவன் கவனிக்கவில்லை. ஆனால் என் சிரிப்பு சட்டென நின்றது. காரணம் அர்ஜூனுக்கு பின்னால் வந்த மாமா. நேற்றைய ப்ரச்சனைக்கு பிறகு அவர் வர மாட்டார் என்று நினைத்திருந்தேன். அதுவும் அர்ஜூனுடன் சேர்ந்து வருவார் என்று எதிர்பார்க்கவில்லை. மாமாவின் பார்வையும் என் மார்பிலேயே நின்றது. இதுவரை இப்படி நேரடியாய் அவர் பார்த்த்தில்லை. என் முக மாற்றத்தை பார்த்த அர்ஜூன் ‘‘என்ன மாமாவும் வந்திருக்காருன்னு பாக்குறியா? அவருக்கு ஏதோ செட்டில்மெண்ட் இருக்காம். சரி பஞ்சாயத்துன்னு வந்தப்புறம் எதுக்கு ப்ரச்சனைன்னு கூட்டிட்டு வரச் சொல்லிட்டேன்’’ என்றான். எனக்கு ஒன்றும் புரியவில்லை. அம்மா கண் முழித்திருந்தாள். அவள் முகத்திலும் அதிர்ச்சி.

‘‘மாமாவுக்கும் உங்களுக்கு ஏதோ கொடுக்கல் வாங்கல் இருப்பதாய் சொல்றாரு. செட்டில்மெண்டுன்னு வரும் போது எனக்கும் பார்த்து கொடுத்துருங்கன்னு கேக்குறாரு. என்ன இருந்தாலும் பெரிய மனுஷன் இவ்வளவுதூரம் கேக்கும் போது மாட்டேன்னு சொல்ல முடியலை. அதுனால கணக்கு என்னான்னு சொன்னீங்கன்னா.. முடிச்சிட்டு போயிருவேன்’’ என்றான். முடிச்சிட்டு என்பதில் அநாவசிய அழுத்ததுடன். எனக்கு இவனைப் பற்றிக்கூட கவலையில்லை மாமா என்ன குண்டைத்தூக்கிப் போடப் போகிறார் என்றுதான் கலவரமாயிருந்த்து.

மாமா அம்மாவின் முன்னால் உட்கார்ந்தார். ‘தாபாரு. எப்ப நான் உங்களுக்கு வேண்டாதவனாயிட்டனோ.. எனக்கு கொடுக்க வேண்டியதை கொடுத்துட்டு மத்த விஷயங்களை செட்டில் பண்ணிக்க, உன் புருஷன் ஜெயில்ல இருக்கும் போதும் சரி. போனதுக்கு அப்புறமும் சரி இது நாள் வரை இந்த வீட்டைக் காப்பாத்தினது நாந்தான். இல்லைன்னு நீ சொல்ல முடியாது. என்ன? வீட்டைன்னு நான் சொன்னது உங்களை காப்பாத்தினதைச் சொல்லலை. இந்த வீட்டையும் காப்பாத்துனது நான் தான்.’’

அதைக் கேட்டு அம்மா கோபமானாள். ‘‘சும்மாவாடா எங்களுக்கு செலவு பண்ணே? என்னை முழுக்க, முழுக்க யூஸ் பண்ணிட்டு இப்ப கணக்குப் பாக்குறியா? நீ நல்லாவேயிருக்க மாட்ட’’ என்று கோபத்துடன் ஆரம்பித்தவள் ஓவென அழ ஆரம்பித்தாள். நான் அவளை அடக்கினேன். அழுகை விம்மலாய் மாறியது.

‘‘சரி.. என்ன கணக்குன்னு சொல்லுங்க’’ என்றேன்.

‘‘இத்தனை வருஷமா உங்களுக்கு ஆனா செலவு கணக்குன்னு பார்த்தா இந்த வீடு கூட மிஞ்சாது. இருந்தாலும் பாவம் பொட்டைங்களா இருக்கிறீங்க. உங்களுக்குன்னு ஒரு ஆதரவு வேணுங்கிறதுனால விட்டுக் கொடுக்கிறேன். உங்கம்மா என் கிட்ட கொடுத்த பவர் பத்திரம் என்கிட்டத்தான் இருக்கு. கணக்கு அது இதுன்னு பாக்காம ஒரு பத்து லட்சம் கொடுத்திரு நான் பாட்டுக்கு போயிடுறேன்.’’ என்றார்.

எனக்கு அதிர்ச்சியாய் இருந்த்து. அம்மா எப்போது பத்திரம் எழுதிக் கொடுத்தாள் என்று அவளைப் பார்த்தேன். அவள் பார்வையில் இருந்த அதிர்ச்சியே அவள் ஏமாற்றப்பட்டிருக்கிறாள் என்று தெரிந்தது. இனி பேசிப் பிரயோஜனமில்லை. அர்ஜுனை பார்த்தேன். ’’என்ன சொல்கிறாய் ஷர்மி அவருக்கு செட்டில் செய்தால் உனக்குன்னு கொடுக்கிறதுக்கு ஒண்ணும் முடியாது என்னால. ஓகேன்னா சொல்லு உன் டாக்குமெண்டை கொடுத்திர்றேன்.’’ என்றான்.

இவர்கள் பேசி வைத்துக் கொண்டு ஆட்டம் ஆடுகிறார்கள் என்று புரிந்தது. ’’சரி செட்டில் செய். ஆனால் ஒன்று அதற்கு முன்னால் அந்த டாக்குமெண்டுகள் எனக்கு வேண்டும்’’ என்றேன்.

‘‘என்ன ஷர்மி என் மேல உனக்கு நம்பிக்கையில்லையா? அதைக் கொடுக்காம எப்படி செட்டில்மெண்ட் செய்வோம்? என்ன மாமா?’’ என்று அவரை கிண்டலாய் அழைக்க, மாமா அசிங்கமாய் சிரித்தார். இப்போதும் அவர் பார்வை என் மார்பில் இருந்தது.

அர்ஜுன் என்னையே பார்த்துக் கொண்டிருந்தான். ’’மாமா உன் செட்டில்மெண்டுக்கு நான் பொறுப்பு. ஓகே. நீ அந்த டாக்குமெண்டை கொடுத்துவிடு’’ என்று சொல்ல மாமா உள் பனியனிலிருந்து ஒரு

டாக்குமெண்ட் பேப்பரை கொடுத்தார். அதில் அம்மாவின் கையெழுத்தோடு பவர் அவர் பெயரில் கொடுத்ததிற்கான கண்டெண்ட் எழுதியிருந்தது. அம்மாவைப் பார்த்தேன். அவள் பார்வையில் ஏமாற்றம் தெரிந்தது. டாக்குமெண்டின் தேதியைப் பார்த்தேன் அப்பா சாவதற்கு முன் தேதியில் இருந்தது. எல்லாவற்றையுமே முன்பே யோசித்துத்தான் தயாராகியிருக்கிறார்கள் எனும் போது என்ன செய்வது என்றே தெரியவில்லை. டாக்குமெண்டை நன்றாக ஒரு முறை படித்துப் பார்த்துவிட்டு, உடன் சுக்கு நூறாய் கிழித்துப் போட்டேன். மாமா எந்தவிதமான ரியாக்ஷனையும் காட்டாமல் என்னையே பார்த்துக் கொண்டிருக்க, “வா.. அர்ஜுன் போகலாம்’ என்று அவனை என் அறைக்குள் அழைத்தேன். எப்போது சொல்வேன் என்று காத்துக் கொண்டிருந்தவன் போல பின்னாலேயே தொடர்ந்தான். அறைக்குள் நுழைவதற்குள் பின்னாலேயே என் மீது பாய்ந்து உடையோடு என் மார்பகங்களை அழுந்தப் பற்றினான். “அர்ஜுன் பொறு.. பொறு” என்று நான் சொன்னதை அவன் கேட்கவேயில்லை. கிட்டத்தட்ட வெறிப் பிடித்தவன் போல இருந்தான். ஒரே இழுப்பில் என் டாப்ஸை கிழித்து, மினி ஸ்கர்ட்டை அப்படியே விட்டுவிட்டு, ப்ராவையும், பாண்டீசையும் கிழித்தெறிந்து, சடுதியில் அவன் உடையை களைந்திருந்தான். அவனது குறி விடைத்திருக்க, எந்தவிதமான முஸ்தீப்புகளும் இல்லாமல் நேரடியாய் என்னை கட்டிலில் தள்ளி, குறிக்குள் அவனைச் செலுத்தி செயல்பட ஆரம்பித்தான். சரக்கென அடிவயிற்றில் கத்தியால் குத்துப் பட்டது போல உச்சந்தலை வரை வலித்தது. மறுபடி மறுபடி அதே கத்திக் குத்து விழ, ஒரு கட்டத்தில் வலி உச்சத்திற்கு போய் சட்டென எல்லாம் சம நிலைக்கு வந்து கத்தலாய் இல்லாமல் முனக ஆரம்பித்திருந்தேன். இன்னும் இன்னும் இன்னும்.. உன்னால் எவ்வளவு முடியுமே அவ்வளவு என்று நான் தயாரான போது அவன் வெடித்து சரிந்திருந்தான். நான் அவனை தள்ளிவிட்டு எழுந்தேன். “இருடி எங்கே கிளம்பிட்டே பத்து லட்சம் அதுக்குள்ள முடிஞ்சிருமா?” என்றவனின் குறி மீண்டும் பழைய நிலையில் இருக்க, இப்போது என்னை மெல்ல, மெல்ல அனுபவித்து புணர ஆரம்பித்தான். கிட்டத்தட்ட நான்கு முறை முடிந்து எழுந்த போதுதான் பார்த்தேன். மாமா ஜன்னல் வழியாய் பார்த்துக் கொண்டிருப்பதை.

‘‘தூ..’’ என்று அவரைப் பார்த்து துப்பினேன். எப்போது பார்ப்பேன் உள்ளே நுழையலாம் என்று காத்திருந்தவன் போல சட்டென உள்ளே வந்தவர் மிகப் பாவமாய் அர்ஜுனைப் பார்க்க, ’’மாமா.. உனக்கும் வேணுமா எடுத்துக்கோ.. என்று தாராளப் பிரபுவாய் இரண்டு கை விரித்து அவரை வரவேற்றுவிட்டு, வெளியே போனான். இதை நான் எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் தடுக்கும் மனநிலையில் நான் இல்லை. நடப்பது நடக்கட்டும் என்று கண் மூடி படுத்திருந்தேன். மாமா இயங்கிக் கொண்டிருந்தார். அதன் பிறகு அர்ஜுனும் மாமாவும் என்னை எச்சில் துப்பும் தொட்டியாக்கியதைப் போல் உணர்ந்தேன். கடைசியாய் அர்ஜுன் மீண்டும் மூயல, அவன் மார்பில் எட்டி உதைத்தேன். கோப்பபட்டு அவன் என்னை அடிக்க வர, மீண்டும் அவனை எட்டி உதைத்தேன். மாமா என் கோபத்தை பார்த்துப் பின் வாங்கினார்.

’’வெளியே போங்கடா திருட்டு தேவிடியா பசங்களா’’ என்று உச்ச்ஸ்தாயில் கத்தினேன். இருவர் முகத்திலும் பயம் அப்பிக் கொள்ள, அவரவர் உடைகளை எடுத்துக் கொள்ள ஆரம்பிக்க, ’’ஓத்தாச்சு இல்லை இனி உங்கள நான் இங்க பாக்கக்கூடாது. இனி கிடைக்கவும் மாட்டேன். கொடுத்த காசுக்கு முடிச்சிருச்சு’’ என்றதும் அர்ஜுன் ஓவென சிரித்தான் ‘‘என்னது கொடுத்த காசா. .உன்னை ஓசில இல்ல செஞ்சோம். உன்னை ஓ..றதுக்கு நான் எதுக்கு இவனுக்கு காசு கொடுக்கணும். அந்த பேப்பர், உங்க மாமாவோட மிரட்டல் எல்லாமே சும்மா உல்லாக்கட்டிக்கு.. ‘‘ என்று சொல்லிவிட்டு ‘‘வா மாமா இன்னும் உனக்கு இவ வேணுமா என்ன? வேணும்னா காசு கொடுத்துட்டு போ.. என்று தன் பாக்கெட்டிலிருந்து கட்டாய் சில ஐந்நூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்து வீசி விட்டு, ‘‘டிப்ஸ் வச்சிக்கோ’’ என்று கிளம்பினான். மாமாவும் என்னை பார்த்துக் கொண்டே கிளம்ப அப்படியே சரிந்து அழ ஆரம்பிதேன்.

ஒரு ஸ்லட்டைப் போல என்னை உணர்ந்தேன். அதன் பிறகு ஒன்றிரண்டு முறை மாமாவும் அர்ஜுனும் வீட்டிற்கு வர, ராட்சசியாய் கத்தி வெளியே துரத்தினேன். அவர்களால் ஏமாற்றப்பட்டு பலியானதில் இருந்த சோகம் என்னை மேலும் வெறி கொண்டவளாக்கியது. இது நாள் வரை வீட்டுத் தேவைகளை மாமாவோ, அல்லது அர்ஜுன் போன்றவர்கள் பார்த்துக் கொண்டிருக்க, அது பற்றி தெரியாம இருந்தவள் இனி அப்படி இருக்க

முடியாது என்று தெரிந்தது. வேறு வழியில்லை என்று முழுக்க நினைய ஆரம்பித்தேன். அதே பிகுவுடன். உடனே யாரிடமும் படியாமல் ஏதோ அவனுக்காக மிகவும் பிரயாசைப்பட்டு போனால் போகட்டும் என்று உறவு கொண்டேன் என்ற எண்ணத்தை படுக்கும் ஒவ்வொருவனிடமும் ஏற்படுத்தி நடித்தேன். ஒரு பெண் இப்படி நடிப்பது மிகச் சுலபம் என்றும் அதை எல்லா ஆண்களும் கிட்டத்தட்ட முகத்தை குழந்தைப் போல வைத்து நிஜம்மா என்று அழுத்தமாய் சொன்னால் நம்பித்தான் தொலைக்கிறார்கள். பாவம். ஆனால் எல்லாம் காரியம் முடிகிற வரைதான். அதான் பார்த்தாச்சே என்று அவர்களிடம் தெரியும் அலட்சியம் நம்மை கொடுமைப் படுத்தும். அந்த அலட்சியமும் அடுத்த ஆட்டம் ஆரம்பிக்கும் வரைதான். இது ஒரு சைக்கிளைப் போல போய்ப் போய் வரும்.

நம்பும் ஆண்கள், டிஸ்கோ பார்டிகளுக்கு ஏற்பாடும் கூட பெண்களை செட் செய்து இருபது சதவிகிதம் சர்வீஸ் சார்ஜ் வாங்கிக் கொண்டும், க்ரூப் பார்ட்டிகளுக்கு அதற்கு ஈடு கொடுக்கும் பெண்களை தேர்ந்தெடுத்து அவர்களுடன் சில சமயம் நானும் ஒருத்தியாகவோ, அல்லது ஈடுபடாமல் ஓர் ஓரத்தில் உட்கார்ந்து பகார்டியோ, ஸ்காட்சோ சப்பிக் கொண்டு வெறி கொண்டு இயங்குபவர்களை வேடிக்கைப் பார்ப்பது படு சுவாரஸ்யம். டிவியில் மியூட் போட்டு விட்டு பாடல்களை பார்க்கும் போது என்ன உணர்வு வருமோ அதே உணர்வு தான் எனக்கிருக்கும். சில க்ரூப்களில் லெஸ்பியன் விருப்பம் உள்ள பெண்கள் அவர்களுக்கான துணையை கேட்பார்கள். சமூகத்தில் உயர் பொறுப்பில் இருக்கும் பெண்கள், காசை காசாய் பார்க்காமல் உடல் சுகத்துக்காக விட்டெறிய தயாராக இருக்கும் இந்த பெண்களை பார்க்கும் போது எனக்கும் அவர்களுக்கும் பெரிய வித்யாசம் இல்லை என்று தோன்றும். இவர்களுடன் வரும் ஆண்கள் தான் பாவம் என்று தோன்றும். ஒருத்தி மாற்றி ஒருத்தி அவர்களை செயலில் ஈடுபடுத்த முயன்று கொண்டிருப்பர்கள். ஒரு ஆணால் செக்ஸ் முடிந்தவுடன் உடனே செயல் பட அவனால் முடியாது. முதல் முறையிலோ, அல்லது ஒரு எக்ஸைட்மெண்டிலோ மட்டுமே ஒரு ஆணால் உடன் தயாராக முடியும். இந்த ஆண்கள் அவர்களை தயார்படுத்த, போதை ஊசி, இடுப்புக்கு கீழே போடப்படும் ஹார்மோன் இன்ஜெக்ஷன். தொடர்ந்து விரைத்து நிற்க வைக்கும் க்ரீம்கள், கோக்கையின் போன்ற

போதை பொருட்களை உபயோகித்துத்தான் சர்வைவ் ஆக முடியும். அந்த வகையில் பெண்கள் கொடுத்து வைத்தவர்கள். மட்ட மல்லாக்க படுத்துவிட்டால் எவனாயிருந்தா எனக்கென்ன தான். அப்படி ஒரு க்ரூப் பார்ட்டியில்தான் நான் அவனைப் பார்த்தேன்.

# 22.வைரம்.

என் பெயர் வைர மூர்த்தி. வைரம். வாட்ச்மேன். இன்சார்ஜ். ஓனர் என என்னை எப்படி வேண்டுமானாலும் அழைப்பார்கள். இந்த வீட்டைப் பொறுத்தவரை எல்லாமே நான் தான். ஒரிஜினல் ஓனர் அமெரிக்காவில் இருக்கிறார். ரெண்டு வருடங்களுக்கு ஒரு முறை இந்தியா வரும் போது உறவினர்கள், நண்பர்களை அழைத்துக் பார்ட்டி கொடுப்பார். சில நாட்கள் குடும்பத்துடன் இருப்பார். அவ்வளவுதான் மிச்ச நாளெல்லாம் நானும் சுப்புலஷ்மியும் தான்.

சுப்புலஷ்மி வீட்டின் வேலைக்காரி. 22 வயதுக்காரி. ஒரு நாள், இதே பீச் அவுசின் பின்னால் ஒர் குழந்தையின் அழுகுரலையும் மீறி இவள் அலறல் சத்தம் கேட்டு, ஓடிப் போய் பார்த்த போது நான்கு பேர் அவளிடம் அத்து மீறிக் கொண்டிருந்தார்கள். அத்தனை பேரும் இளைஞர்கள். போதை. இரவு. டார்ச்சை எடுத்துக் கொண்டு போலீஸ் விசிலை எடுத்து ஊதியபடி அவர்களை நோக்கி ஓடினேன். இந்த போலீஸ் விசில் எனக்கு பல முறை பல பிரச்சனைகளிலிருந்து காப்பாற்றியிருக்கிறது. விசில் சத்தம் கேட்டு அவர்கள் கலைந்தார்கள். ரவிக்கை எல்லாம் கிழிந்து அலங்கோலமாய் இருந்தாள். அவளருகே ஒர் மூன்று வயது பெண் குழந்தை அழுது கொண்டிருந்ததை பார்த்ததும் ஏதும் கேட்காமல் அவளை வீட்டிற்கு அழைத்து வந்தேன். .இது போன்ற பல நிகழ்வுகளை ஈஸிஆர் பீச் அவுஸ் இருட்டுகளில் பார்த்தவன் தான். என்றாலும் ஏனோ தெரியவில்லை சுப்புலஷ்மியின் மேல் ஓர் பச்சாதாபம் அதற்குள் வந்துவிட்டிருந்தது.

தஞ்சாவூர்க்காரி. அங்கே காதல் வீட்டை விட்டு ஓடி வந்து பாண்டிச்சேரியில் வாழ்க்கை. குழந்தை என எல்லாம் நன்றாக போய்க் கொண்டிருந்த நேரத்தில் திடீரென புருஷனைக் காணவில்லை. விட்டுவிட்டு போய்விட்டான். அன்றிலிருந்து குழந்தையுடன் தனிமையான வாழ்வு. கூலி வேலை, பொருளாதாரப் பிரச்சனை. வாழ்க்கைக்கான தேடல் என அழுத்தம் அதிகமாக

லோக்கல் ப்ராத்தல் பெண் கொடுத்த நம்பிக்கையில் மாசச் செலவுக்கு இறங்கியவள். வெளியூர் பயணமென்றால் கொஞ்சம் காசு அதிகம் பார்க்கலாம் என்று ப்ரோக்கர் சொன்னதன் பெயரில் சென்னைக்கு பயணம். குழந்தையை வழக்கமாய் பார்த்துக் கொள்ளும் பக்கத்துவீட்டு ஆயா உடம்பு சரியில்லாமல் போய்விட, கஸ்டமரின் கார் ஏறும் போது 'குழந்தைய பார்த்துக்க ஆள் இல்லை. கூட கூட்டிட்டு வரட்டுமா? " என்று கேட்ட போது வண்டியிலிருந்தவன் பெரிய மனசுடன் 'பின்னாடி குழந்தைய வச்சிக்க" என்று தாளார மனதுடன் சொன்னதன் விளைவாய் நிம்மதியான சென்னை பயணம் என்று சந்தோஷப்பட்டாள். பின்னாடி குழந்தையை வைத்ததற்கு காரணம் வேறு. ரெண்டு மணி நேரத்துக்கு ஒருமுறை கார் ஓட்டியவனின் மீது குனிய வேண்டியிருந்தது சுப்புலஷ்மிக்கு.

மகாபலிபுரம் தாண்டி வரும் போது நான்கு பேர் வண்டியில் ஏறிக் கொண்டதும் கொஞ்சம் பயமாய் இருந்தது. அனைவரும் குடித்திருந்தனர். குழந்தையை ஆளாளுக்கு கையாள, சுப்புலஷ்மிக்கு பயம் அதிகமானது. "ஒருத்தர் தானே சொன்னீங்க?" என்றாள் ஹீனமாய்.

"நீ கூடத்தான் தனியா வர்றேன்னே.. குழந்தையோட வரலை." என்று கெக்கலித்தான் அழைத்தவன். அதன் பிறகு நடந்தது எல்லாம் கலவரம் தான். அதெல்லாம் முடியாது என்று அவள் மறுக்க, வண்டியை இருட்டு பங்களா பின்னால் ஒதுக்கி, நான்கு பேரும் ஒரே நேரத்தில் அவள் மேல் பாய்ந்திருக்கிறார்கள். இவள் பயந்து போய் கத்த, அதைப் பார்த்து அரைத் தூக்கத்தில் இருந்த குழந்தை பயந்து எழுந்து அழ, அதன் பின்பு தான் வைரமாகிய நான், டார்ச் லைட் சம்பவங்கள் எல்லாம் நடந்தேறியது.

இரவு முழுவதும் அவள் தூங்கவில்லை. குழந்தையை அணைத்துக் கொண்டு விசும்பிக் கொண்டேயிருந்தாள். காலையில் அவளுக்கும் குழந்தைக்கும் சாப்பிட ஏதாவது வாங்கி வரலாம் என்று போய் வருவதற்குள் வீட்டின் தரைப்பகுதி முழுவதையும் துடைத்து மொழுகி வைத்திருந்தாள். இட்லியும் பொங்கலையும் அவளிடம் கொடுத்தேன். ஏதும் பேசாமல் இருவரும் சாப்பிட்டார்கள். பார்ட்டிக்கு வந்தவர்கள் விட்டுப் போன துணிகளை எடுத்து வைத்திருந்ததிலிருந்து ஒரு ட்ரஸை எடுத்துக் கொடுத்தேன். சரியாய் இருந்தது.

“ஒரு நூறு ரூபா கொடுக்கிறீங்களா? ஊருக்கு போக ஒத்தக்காசு இல்லை” என்று சொல்லும் போது அழுகை வெடித்தது. அவள் அழுது முடிக்கும் வரை காத்திருந்தேன். “இங்கேயே தங்கி வேலை செய்யுறியா?” என்றேன். ஆச்சர்யமாய் தலை தூக்கிப் பார்த்தாள்.

“வீட்டை காலி பண்ணிட்டு வந்திரட்டுமா?’ என்று கேட்டாள்.

“வா” என்று ஐந்நூறு ரூபாயை கொடுத்தேன். கொஞ்சம் நெருக்கமாய் வந்து “நான் திரும்ப வருவேன். நம்பிக்கை இல்லைன்னா ஒரு வாட்டி இருந்துக்கிறியா?” என்றாள். அவள் கண்களில் கண்ணீர் தளும்பியிருந்தது. ‘போய்ட்டு வா” என்று அனுப்பி வைத்தேன். அடுத்த நாளே சிறு பையுடன் திரும்ப வந்தாள். வந்ததிலிருந்து என்னோடுதான். வீட்டு வேலைக்கு ஆள் வைத்திருக்கிறேன் என்று ஓனரிடம் சொல்லி அவளுக்கான சம்பளம் எல்லாம் ஏற்பாடு செய்துவிட்டேன். சம்பளம் அதிகமில்லையா? என்று கேட்ட ஓனரிடம், ஆள் புழங்கும் வீட்டை பராமரிப்பது ஓரளவுக்கு எளிது. ஆளில்லாத வீடு பாழாயிரும். புழங்காத இடங்களில் மிக சுலபமாய் தூசு படியும். மெல்ல வீட்டினுள் பழைய வாசனை நுழையும். அப்படி வாசனையாய் நுழைய ஆரம்பித்து மெல்ல பழையதாகவே மாறும். புழங்காத மனித மனங்களைப் போல.

அக்கம் பக்கம் வீடுகளை பார்ட்டிக்கு விடுவது குறித்து தெரிந்தாலும் அமைதியாய்த்தான் இருந்தேன். ஒரு நாள் ஓனர் அமெரிக்காவிலிருந்து போன் செய்து அவரது நண்பர்களுக்காக ஒரு பார்ட்டிக்கு ஏற்பாடு செய்யச் சொல்லி ஆரம்பித்தது. அன்றைய பார்ட்டி படு நாகரீகமான பார்ட்டி. எட்டு பேர் ஆண்/ பெண் சேர்த்து. அனைவரும் இளைஞர்கள். அதில் ஜோடியில்லாமல் ஒரு நடுத்தர வயதுக்காரர் இருக்க, அவருக்குத்தான் பார்ட்டி என்றார்கள். மெல்லீதான வால்யூமில் பாடல்கள் போடப்பட்டது. அருகே இருந்த ஓட்டலிலிருந்து சாப்பாடு வகையறாக்களை ஆர்டர் செய்துவிட்டிருக்க, சரக்கு அடிக்க ஆரம்பித்த சில நிமிடங்களில் ஆளாளுக்கு ஒருவரை தெரிந்தெடுத்துக் கொண்டு அறைக்குள் நுழைந்தார்கள். நடுத்தர வயதுக்காரர் மட்டும் அமைதியாய் குடித்துக் கொண்டிருந்தார். பார்ட்டி யாருக்கு என்று புரியாமல் அன்றிரவு கழிந்தது. போகும் போது ஆளாளுக்கு டிப்ஸ் என்று கொடுத்த

பணமே ஒரு மாத சம்பளத்திற்கு இணையாய் வரவும் எனக்கு ஆசை தொற்றிக் கொண்டது.

ஆனால் வழக்கமாய் பார்ட்டிக்கு வாடகைக்கு விடும் இடங்களில் பல பிரச்சனைகளை சந்திப்பதாய் அந்தந்த வீட்டு ஆட்கள் சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறேன். பக்கத்து வீட்டு ஓனர் போலீஸ் புகார். நியூசென்ஸ். லோக்கல் ஆட்களின் கட்டப்பஞ்சாயத்து. கட்டிங் என பல பிரச்சனைகளை சமாளிக்க வேண்டியிருக்கிறது என்றும் பல வீடுகள் பார்டிக்கு வாடகைக்கு விட தயாராகிவிட்டதால் காம்படீஷன் அதிகமாகி, பண வரவு குறைவாகிவிட்டதாய் புலம்பினார்கள்.

இதையெல்லாம் யோசித்து எப்பவாவது வாடகைக்கு விடுவோம் அதுவும் ரொம்ப குறைவான நபர்களுக்கு என்ற கண்டீஷனோடு ஆரம்பித்தேன். முதல் கஸ்டமர் மொதலாளி அனுப்பியவர்தான். என்னுடைய பங்களாவின் ஸ்பெஷாலிட்டி குறைந்தது பத்து கார்களையாவது பங்களாவினுள் பார்க் செய்ய முடியும். அத்தோடு என் கண்டீஷன்கள் அதிகம். பாட்டு சத்தம் அதிகம் வைக்ககூடாது. கூட்டம் கூடாது. அமைதியாய் இருக்க வேண்டும். சரக்கு, சாப்பாடு எல்லாமே என் மூலம் தான் உள்ளே வர வேண்டும் என்பது போல பல வேண்டும்களை வைத்தேன். இங்கே வந்தவர்களுக்கு இத்தனை வேண்டும்களால் கிடைத்த அமைதியும், பாதுகாப்பும் பிடிக்க ஆரம்பிக்க, மெல்ல அவர்களின் நண்பர்களை அறிமுகப்படுத்தினார்கள். மாதத்தில் இருபது நாளாவது பார்ட்டி ஆர்டர் கிடைக்க, நாளை பின்னால் ஓனருக்கு தெரிந்தால் பிரச்சனையாகும் என்று யோசித்து பத்து நாளுக்கு ஒரு முறை ஒரு பார்ட்டி கேட்கிறார்கள் என்று அவர்களின் கணக்கில் வரவு வைக்க ஆரம்பித்ததன் காரணமாய் நான் நேர்மையானவனாகிப் போனேன்.

சுப்புலஷ்மிக்கு நன்றாக சமைக்க வரும். கிராமத்து ஸ்டைல் சமையலில் அவள் ராணி. இங்கே வந்த பிறகு அவளின் வாழ்க்கையும் கொஞ்சம் ராணித்தனமாகவே மாறியிருந்தது. சாப்பாட்டை ருசித்தவர்கள். சமயங்களில் அவளையும் ருசிக்க ஆசைப்படுவார்கள். என்னிடம் சொல்வார்கள். அவள் அப்படியெல்லாம் கிடையாது என்பேன். அவளுக்கு நான் பாதுகாப்பான இடம் கொடுத்தேனே தவிர அவளை என் கண்ட்ரோலில் வைத்துக் கொள்ள எப்போதும் விரும்பியது இல்லை. நான் அவ்வளவு நல்லவனுமில்லை.

உலகத்தில் சல்லீசாக கிடைக்காத எதன் மீதும் ஆர்வம் அதிகமாகிவிடும். விலை கூடும். அதன் மீதான ஆர்வம் வெறியாய் மாறும் போது டிமாண்ட் அதிகமாகி நான் நீ என போட்டி உண்டாகும். அதை அறுவடை செய்யும் திறமை இருக்கிறது என்பது என் நம்பிக்கை. இந்த வீட்டைப் பொறுத்தவரை எல்லாவற்றுக்கும் நான் தான் ராஜா.

இது எதுவும் தெரியாதது போல அவள் சாப்பாடு எடுத்து வைக்க, எடுக்க என்று அவ்வப்போது போய் வரச் சொல்வேன். போதை ஏறியிருக்க, அவளை எப்படியாவது அடைய வேண்டும் என்கிற வெறி. கூட்டி வந்தவள் தொழில் காரியாய் இருக்கும் பட்சத்தில் சரக்கடித்து மல்லாந்திருந்த, சுப்புலஷ்மியை பார்தவனுக்கு தூக்கம் வராது. கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் அவளிடம் பேசி சரி செய்ததாய் பில்டப் செய்து அனுப்பி வைப்பேன். சொளையாய் பத்தாயிரம் வாங்கிக் கொண்டு. முதல் முறை அவளிடம் மொத்த பணத்தையும் கொடுத்த போது “இத்தன காசா? இதே வேலைக்கு ஐந்நூறுக்கு ஆயிரத்துக்குமே கஷ்டப்பட்டிருந்தேன்’ என்று அழுதாள்.

‘‘காசுக்காக படுத்தா தேவிடியாத்தான் ஆனா அதை எங்க யார் கூடப் படுக்குறோங்கிறது முக்கியம்’’ என்றேன்.

அவளின் சம்பாத்தியத்தில் ஏதும் கட்டிங் கேட்டதேயில்லை. அவளும் எப்போதும் தயார் என்கிற நிலையில் இருந்ததேயில்லை. பல சமயங்களில் வெறும் வேலைக்காரியாய், சமையல்காரியாய் மட்டுமே இருப்பாள். இது நாள் வரையில் எனக்கு சுப்புலஷ்மியின் மேல் காதலோ, காமமோ வரவேயில்லை. அது ஏன் என்று புரியவில்லை. அவளின் மகள் தேவியின் மீது மட்டும் எனக்கு அபரிமித பாசம்.

என் பார்ட்டிகள் கொடுக்கும் வாடகை, சாப்பாடு, மருத்து இத்யாதிகளின் எல்லா செலவுகளும் போக மாதம் வரும் சம்பளமில்லாமல் நாற்பதிலிருந்து ஐம்பதாயிரம் ரூபாய் நின்றது. அதற்கு காரணம் நான் முன்னமே சொன்ன பல கண்டீஷன்கள். அதனால் வெளித் தொந்திரவு இல்லை. பல கண்டீஷன்களை சொல்லி இதுக்கெல்லாம் ஓக்கேன்னா இடம் தர்றேனு ஷர்மியிடம் சொன்ன போது “நியூட் பார்ட்டி. ரொம்பவே ரகசியமா நடக்கும். பத்து

பேருக்குள்ளத்தான். டபுள் ரேட். நீ மாசம் பத்து பார்ட்டி நடத்தி சம்பாரிக்கிறத மூணே பார்ட்டியில சம்பாரிக்கலாம். என்ன என்னையும் கவனிச்சிரு'' என்றாள்.

ஷர்மியை எனக்கு நன்றாகத் தெரியும். பல பார்டிகளுக்கு ஆள் கூட்டிக் கொண்டு வருவாள். எப்பவாது ஒரு முறை அவளும் அதில் கலந்து கொள்வாள். பெரும்பாலும் இரவுகளில் பால்கனியில் அமர்ந்து சிகரட் புகைத்துக் கொண்டோ, குடித்துக் கொண்டே வெற்றுப் பார்வை பார்த்துக் கொண்டிருப்பாள். பெரும்பாலும் பார்ட்டி நடக்கும் நாட்களில் நான் தூங்குவதில்லை. அதனால் அவளை கவனிக்கும் வாய்ப்புகளில் எல்லாம் சிநேகமாய் ஒரு சிரிப்பு சிரித்துவிட்டு, கையில் வைத்திருக்கும் ஸ்டப்பை புகைக்கிறாயா? என்று அங்கிருந்தே கேட்பாள். சமயங்களில் நல்ல ஸ்டப் வைத்திருப்பாள். புகைத்திருக்கிறேன். நிறைய பேசியிருக்கிறேன். ஆனால் எனக்கு என்னவோ அவளிடம் ஒரு திருட்டுத்தனம் இருப்பது போன்றே எப்போதும் எண்ணம். ஆனாலும் எனக்கு கொஞ்சம் அடக்க ஒடுக்கமாய் பிஸினெஸ் செய்யவே ஆசை. அவள் கொடுத்த ஐடியா அதற்கு வசதியாய் இருக்க, என் வீட்டில் நடக்கும் மூன்றாவது நியூட் பார்ட்டி இது.

முதல் முறை நடந்த போது கொஞ்சம் அதிர்ந்துதான் போனேன். அத்தனை பேரும் பெரிய வீட்டு பெண்கள். இளம் பெண்கள். போதை எல்லாம் மீறி அவர்களிடமிருந்த செக்ஸ் வேட்கை சூடேற்றியது. சுப்புலஷ்மியும் சாப்பாடு வைக்கப் போய் ஒரு மாதிரி முகம் வெளிறி வந்தாள். ''என்னய்யா இப்படி செய்யுறாங்க'' என்று ஆச்சர்யப்பட்டு பேசினாள். குரல் காற்றாய் வெளிவந்தது. அன்றிரவு முதல் முதலாய் அவளிடம் செக்ஸ் வைத்துக் கொண்டேன்.

# 23. ஷர்மி.

வைரத்தை எனக்கு மூன்று வருடமாய் தெரியும். எல்லாவற்றுக்கு பயப்படுகிறவன் போல சீன் போடுவான். கன்னிங் பெல்லோ. இரவு முழுவதும் தூங்கவே மாட்டான். ஸ்டப் மீது அவனுக்கு ஆர்வம் அதிகம். வேண்டா வெறுப்பாய் குடிப்பது போல வாங்கி உறுஞ்சுவான். அவனுக்காகவே பல சமயம் ஸ்டப் வாங்கி வைத்துக் கொண்டு போவேன். எத்தனையோ பார்ட்டிகளில் அவனை பார்த்திருக்கிறேன். ஆனால் நியூட் பார்ட்டிகளில் மட்டும் ஸ்டப் கண்டிப்பாய் கேட்டு வாங்கி விடுகிறான். ஸ்டப் அடித்ததும் சுப்புலஷ்மியை கூட்டிக் கொண்டு போய்விடுகிறான்.

அவனது அதீத ஜாக்கிரதை உணர்வு எனக்கு பெரிய ப்ளஸ். சென்னையில் என் போன்று நியூட் பார்டிகளை அரேஞ்ச் செய்து தருவதில் குறிப்பாய் ரெண்டொரு பேர் தான் இருக்கிறார்கள். அதில் கொஞ்ச சீப்பான ஆள் நான் தான். இம்மாதிரியான எக்ஸ்க்ளூசிவ் பார்ட்டிகள் விலை மதிப்பு அதிகமாய் இருந்தால் தான் நல்லது. மிகச் சிறிய வட்டத்தில் இருக்கும். சே.ஃப். பணக்காரர்களுக்கு எக்ஸ்க்ளூசி மீதும், எக்ஸ்பென்சிவ் மீதும் எப்போதும் ஒரு ஸ்பெஷல் கிரக்கம் உண்டு. ரகசியத்தின் மீதான இச்சை.

ஆனால் என் இச்சையெல்லாம் இந்த கச்சடாவிலிருந்து எப்படியாவது வெளியாக வேண்டுமென்பதுதான். உடம்பும், இளமையும் இருக்கும் வரைதான் இந்த ஆட்டமெல்லாம். என் அப்பா இழந்ததை, அம்மா தொலைத்ததை, நான் காற்றில் பறக்கவிட்டதை எல்லாவற்றையும் ஒரு சேர பணத்தால் மொழுகி மாளிகையாக்க வேண்டும் என்கிற வெறி, நான் சந்தித்த துரோகங்கள் கொடுத்த பாடம். பணம் இருந்தால் எல்லாமே சரியாய் நடக்கும். நேர்மையாய் இருந்தால் பணம் கிடைக்காது. கூட்டிக் கொடுத்து கோடீஸ்வரி ஆக முடியாது. அழகை வைத்து ஒருத்தனுக்கே வைப்பாட்டியும் ஆக முடியாது. இளமை போனால் புதிய இளமைக்கு இடம் கொடுக்க தயாராக வேண்டும். பணம்

நமக்கே நமக்கான பணம் எல்லாவற்றையும் மாற்றும். அதனால் எதை செய்தாவது பணம் சம்பாதிப்பது சரியென்ற முடிவெடுத்துத்தான் இந்த பார்ட்டியின் பின்னால் இருக்கும் ரிஸ்க் தெரிந்து இறங்கினேன். அரேஞ்ச் செய்ததினால் கிடைக்கும் பணத்தை விட அதிகமாய் சம்பாதிக்க ஏக வழியிருப்பதை வேறு சில பார்ட்டிகளில் நடந்ததை வைத்து முடிவு செய்தேன்.

பல பார்ட்டிகளில் மிகச் சாதரணமாய் செல்போன்கள் தொலையும். பெரும்பாலும் சைலண்ட் மோடில் வைத்திருப்பார்கள். போதை மிஞ்சி கிடைத்த சோப்பாக்களில், தரையில், பெட்டுக்கு அடியில் எல்லாம் சம்போகம் செய்யும் ஆர்வத்தில் எந்த ட்ரெஸ்சை எங்கே கழட்டினோம் என்று காலையில் தான் தேடுவார்கள். கிடைக்காமல் அடுத்த நாள் கிளம்பும் அவசரத்தில் செல்போன்களும், காதணிகளும் விட்டு போயிருக்கிறார்கள். ஒரு பார்ட்டிக்கு ஒன்றிரண்டாவது தேறும் பட்சத்தில் லட்சத்திலான போனும் ப்ளாட்டினம் மற்றும் வைரம் பதித்த காதணிகளும் நல்ல விலைக்கு போகும். பார்ட்டி அரேஞ்ச் செய்கிற பொறுப்பில் உள்ளவள் என்பதால் எல்லாம் செக் செய்து பணம் செட்டில் செய்துவிட்டு போகும் போது கிடைத்ததை அள்ளிக் கொண்டு போய் விற்றிருக்கிறேன். அதில் ஒரு முறை போனை தொலைத்தவன் அடுத்த நாள் வந்து, நேற்று போன் தொலைந்துவிட்டது கொஞ்சம் முக்கியமான டிடெயில்ஸ் எல்லாம் இருக்கு. உள்ள தேடிப் பார்க்கட்டுமா? என்று வைரத்திடம் வந்து கேட்டிருக்கிறான். போன் பற்றிய டிடெயில் எல்லாம் வாங்கிக் கொண்டு, தேடிப் பார்க்க அனுமதித்து விட்டு, எனக்கு போன் செய்தான்.

‘‘மேடம் இங்க ஒருத்தர் வந்திருக்காரு. அவரோட செல்போனை தேடிட்டு. உங்களாண்டதான் இருக்கும்னு எனக்கு தெரியும். மனுஷன் பதறுறத பார்த்தா வேற ஏதோ முக்கியமான விஷயமாப் படுது. வித்தா கிடைக்குற காசை விட அதிகமா வரும்னு தோணுது. என்ன சொல்றீங்க?’’ என்றான். எனக்கு தூக்கி வாரிப் போட்டது. இல்லை எனக்கு தெரியாது என்று சொல்ல நா எழும்பினாலும் சொல்ல வரவில்லை. வேறு வழியில்லை. ‘‘சரி..பார்ட்டி ஆர்கனைசரை கேட்டு சொல்லுறேன் சொல்லு. என் நம்பர் கொடு. நான் பேசி முடிச்சு வைக்குறேன்’’ என்று போனை கட் செய்யப் போகும் முன் ‘‘மேடம்..’’ என்று இடைமறித்தான். ‘‘என்ன’’ என்றேன்.

‘‘நம்மளையும் கவனிச்சுக்கங்க’’ என்று கெஞ்சலாய் கேட்காமல் கட்டளையாய் சொன்னான்.

அடுத்த அரை மணி நேரத்தில் சம்பந்தப்பட்டவன் கால் செய்ய ‘‘அங்கேயெல்லாம் இருக்காதீங்க. அங்க இன்சார்ஜூல இருக்குறவனுங்க கிட்ட தனியா பேசி வாங்கித் தர்றேன். இந்த மாதிரி பார்ட்டியில எல்லாம் நீங்க தான் ஜாக்குரதையா இருக்கணும் ப்ரோ’’ என்று பாசமாய் பேசி. அவனுக்கும் அவள் காதலிக்குமான ஸ்பெஷல் போட்டோக்கள் இருப்பதாகவும் அது வெளியில் தெரிந்தால் பிரச்சனை ஆகிவிடும் என்றும் எத்தனை காசானாலும் பரவாயில்லை என்று சொல்ல வைத்து கிட்டதட்ட ஒரு லட்சம் வரை கறந்து வெறும் 25 ஆயிரத்தை வைரத்துக்கு கொடுத்து போனை கொடுத்தேன். அது முதல் வைரத்துக்கும் எனக்கும் நல்ல டீல் ஓடிக் கொண்டிருக்கிறது.

இது என் மூன்றாவது பார்ட்டி. இரண்டு ஜிகிலோக்கள் உட்பட. அன்று தான் ராஜனை முழுசாய் பார்த்தேன். இருப்பதில் திறமையானவனாய், பலரை சமாளித்துக் கொண்டிருந்தான்.

# 24.நான்

தலையில் ரத்தம் வழிய, வலியில் துடித்துக் கொண்டிருந்த ஷர்மியை பிடித்துக் கொண்டே ‘‘ யோவ் லூசாயா நீ? நான் சித்தார்த்த தடுக்குறதுக்காக வந்தா நீ மாடு மாதிரி மேல வந்து மோதி அவரு மேல வீழ்ந்துட்டு நான் அடிக்க வந்தேங்குறே?. சித்தார்த் நானா உங்களை அடிக்க வந்தேன்?’ என்று பதிலுக்கு கத்தினேன். என் சத்தம் இன்னமும் அதிகமாய் இருக்க, திடீரென அமைதி நிலவியது.

‘‘ஸ்டாபிட்.. ஸ்டாபிட்.. இங்கே யாரும் சண்டை போட வரலை. வைரம் கொஞ்சம் ஐஸ் கொண்டு வா. ஷர்மி மண்டையில அடி பட்டிருக்கு. ரத்தம் கொட்டுது. போங்க. ஐங்கரன் கொஞ்சம் அமைதியாய் இருங்க. சித்தார்த் உட்காருங்க பேசலாம் முதல்ல கை நீட்டினது நீங்கதான்.’’ என தொடர் கட்டளையிட்டுக் கொண்டிருந்தேன். எல்லோரும் நான் சொன்னதை

கேட்டார்கள். வைரம் ஐஸ்ஸின் மீது துணி சுற்றி அதை ஷர்மியின் தலையின் மேல் வைத்தான். ஷர்மி கலங்கித்தான் போயிருந்தாள்.

“சித்தார்த் நிஜமாகவே அவள் எடுக்கலை. இதை எப்படி உங்களுக்கு ப்ரூவ் பண்ணுறதுனு புரியாம இருக்குற நேரத்துல, நீங்க சொல்லுற கொள்ளைய எதுக்கு அவ செய்யணும்?”

“சரி செய்யாத. நான் என்ன செய்யணுமோ அதை செஞ்சுக்குறேன். கம்ப்ளெயிண்ட் பண்ணா நானும்தான் மாட்டுவேனு நினைப்பே. இப்ப தொலைஞ்ச வைரத்துக்கு பதில் சொல்லாட்டா என் லைஃபே ரிஸ்க் தான் அதுக்கு பதிலா ஏதோ ஒரு கேஸுல உள்ள இருக்குறது எனக்கும் நல்லதுதான். என்ன நானெல்லாம் இங்க பார்டிசிபெண்ட். நீங்க தான் கேங் லீடர். ட்ரக், செக்ஸ், அப்யூசிங், மேன் ஹேண்டலிங், கொலை முயற்சினு லைன்ல கட்டி வச்சி சாட்சி சொல்வோம். என்னா ப்ரெண்ட்ஸ் சொல்ல மாட்டீங்க?” என்று அவனை சுற்றியுள்ளவர்களைப் பார்த்தான். அனைவரும் மையமாய் தலையாட்டினார்கள். ப்ளானை சொல்லும் போது புதியதாய் வந்தவர்கள் அங்கே இல்லவே இல்லை இருந்தாலும் தலையாட்டினார்கள்.

“இது அநியாயம். நீ எடுத்துட்டு வந்தேங்குறதுக்கு என்ன ப்ரூப்?” என்ற ஷ்ர்மியை கோபமாய் பார்த்தான் சித்தார்த்.

“ம்ம்..ங்கொத்தா கேக்குறா பாரு கேள்விய?. ஐங்கரன் நேத்து நீங்க பாத்தீங்க இல்லை?” என்று ஐங்கரனைப் பார்த்துக் கேட்டான். அவனும் தலையாட்டினான்.

‘உங்க ஆளு ஆமாம் சொல்லாம வேற என்ன சொல்லுவாரு?’ என்ற என்னையும் முறைத்தான்.

“பின்ன யார் சொன்னாத்தான் நம்புவீங்க?. தொலைஞ்சது எங்க பொருள். எங்களப் பொறுத்தவரை ஒத்துக்கிட்டாலும் ஒத்துக்காட்டாலும் ஷர்மிதான் திருடி. ஏன்னா ட்ராக் ரெக்கார்ட் இருக்கு இல்லை.? பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்னு ஒரு டயலாக் சொல்வாங்களே அது இந்த மாதிரிதான்.” என்று கெக்கே என்று சிரித்தான். பல நாள் திருடன் பற்றிய ஜோக்கை அவன் பேசுவது எரிச்சலாயிருந்தது.

‘‘என்னாடா இவனெல்லாம் பல நாள் திருடன் ஸ்டேட்மெண்ட் அடிக்கிறானேனு கோவம் வருதா? நான் திருடன் இல்லையில்லை. எக்ஸிக்யூஷனர். தலைவன்.’’ என்று மேல்லும் சிரித்தான்.

’’சரி.. பண்றேன். ஆனா நீ கொள்ளை அடிக்க சொல்றது நீ கொண்டு வந்ததா சொல்லுறத விட அதிகமான வேல்யூ இல்லை?’’

‘‘ம்ம்.. நல்ல கேள்வி. ஐ வில் கெட் யூ 10 பர்செண்ட். ஓக்கேவா?. பெரிய பணம் அட்லீஸ்ட் ஒரு ரெண்டு வருஷத்துகாவது ஓட்டைய விரிக்காம சந்தோஷமா இருக்கலாம்?’’ என்று மீண்டும் சிரித்தான். ’’அதென்ன ரெண்டு வருஷம்னு பாக்குறியா? ஆடின காலும்.. ஓ..’’ என்று முடிக்காமல் சிரித்துக் கொண்டேயிருந்தான். அனைவரும் சிரித்தார்கள். வைரம் மட்டும் எங்களை பரிதாபமாய் பார்த்துக் கொண்டிருந்தான்.

’’நீ எனக்கு ஹெல்ப் பண்ணுவ இல்லை?’’ என்று என்னைப் பார்த்து கேட்டாள் ஷர்மி. அவள் குரலில் உறுதியிருந்தது.

# 33. அவன்

ஒத்துக் கொள்வாள் என்று எனக்கு முன்பே தெரியும். வேறு வழியேயில்லை. மாதங்களாய் உட்கார்ந்து ப்ளான் செய்த விஷயம். இந்த பார்ட்டிகளில் கலந்து கொள்ளும் பெண் ஒருத்தி ஒரு கிராம் ஹெராயினுக்காக என்னுடன் படுத்த போது போதையில் உளறினாள். நியூட் பார்ட்டி, தனியிடம் என வரிசைக் கட்டி சொன்ன விஷயங்களை என்னால் நம்ப முடியவில்லை. பின் மெல்ல அவள் மூலமாய் விஷயங்களை சேகரிக்க ஆரம்பித்தேன். ஜிகோலோசைப் பற்றி ஏற்கனவே கேள்விப்பட்டிருந்தாலும், அவள் மூலமாய் காண்டேக்ட் பிடித்தேன். அப்படியான ஒருத்தனை அழைத்து பேசினேன். விவரமாய் சொன்னான். யார் அரேஞ்ச் செய்கிறார்கள்?. வரக்கூடிய பெண்கள், ஆண்களின் சமூக அந்தஸ்து. இடம் சேப்டி எப்படி?. ஜிகிலோஸ் எப்படி அழைத்து வரப் படுகிறார்கள்?. ஷர்மி பற்றி, அவளுடன் சமீபகாலமாய் இணைந்திருக்கும் சக ஜிகிலோ பற்றி, ஷர்மி செய்யும் திருட்டுக்கள் பற்றி, அதில் யார் யார் பங்கு என்பது பற்றி, என எல்லாவற்றையும் லிஸ்ட் போட்டுச் சொன்னான்.

பல திருட்டுக்கள் வெளியே தெரியாது என்று பலர் நினைத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் எவனோ ஒருவன் அதை கவனித்துக் கொண்டிருப்பான். நீங்கள் செய்யும் செயல் அவனுக்கு தேவையில்லாதாய் இருக்கலாம். அதனால் கவனம் கொடுக்காமல் இருந்திருப்பான். அதே நேரத்தில் அவனுக்கு தேவையெனில் நிச்சயம் தனக்கு தெரிந்ததை ஆயுதமாய் கையில் எடுப்பான். இவன் ஷர்மிக்கு எதிராய் ஆயுதம் எடுக்கக் காரணம். பொறாமை. சக ஜிகிலோவும், அவளும் இணைந்து சம்பாரிப்பது மட்டுமில்லாமல் தனக்கு பங்கு தரக்கூட யோசிக்கவில்லை என்பதினால் தான்.

“நீ தான் கேட்கவே இல்லையே? யாராச்சும் தானா வந்து நான் திருடறேன். வெளிய சொல்லாதனு மாட்டிப்பாங்களா?’

“கேட்குறேன் இல்லை. நாமெல்லாம் ஒண்ணாத்தானே தொழில் செய்யுறோம். சம்பந்தமே இல்லாத வீட்டு கேர் டேக்கருக்கு காசு போகுது. கூடவே இருக்குற எனக்கு கொடுத்தாத்தான் என்ன? திருடி சம்பாரிச்சதுன்னு சொல்லாம ஏதாச்சும் டிப்ஸ் அது இதுன்னு கொடுக்கலாமில்லை. நீங்க யாருன்னே தெரியலை. நிச்சயம் போலீஸோ, அரசாங்கம் சம்பந்தப்பட்ட ஆள் இல்லை. இல்லாட்டி உங்களை அம்சா மேடம் இண்டர்டியூஸ் பண்ணியிருக்க மாட்டாங்க.” பணம், சுகம் எல்லாவற்றையும் மீறி அவனிடம் இன்னமும் மிச்சமிருக்கும் அப்பாவித்தனத்தை என்னவென்று சொல்வது?.

எதற்காக இத்தனை முன் ஏற்பாடு?. எதற்காக ஷர்மி? ஏன் நானே செய்யக்கூடாது? என ஆயிரம் கேள்வி எழலாம். என்னால் முடியாது என் முகத்தை வெளியே காட்ட முடியாது. மொத்தமாய் ப்ராஸ்தெடிக் மேக்கப் போட்டு அடையாளம் தெரியாத வண்ணம் மாற நான் என்ன கமலஹாசனா? டாம் க்ரூயிஸா?.

இதை செயல் படுத்த நம்பகமான ஆட்கள். நம்பகம் என்பதை விட ப்ரச்சனையிலிருந்து தப்பிக்க எதை வேண்டுமானாலும் செய்ய தயாராக இருக்கிற ஆட்கள். வாழத் துடிக்கிற ஆசை உள்ள ஆள் வேண்டும்.. மாட்டினால் மொத்தமும் அவ்வளவுதான். ஏற்கனவே என் மேல் மூன்று கொலை வழக்குகள், ரெண்டு ஹீஸ்ட் கேஸ்கள் இருக்கிறது மும்பையில். ஒர் நம்பிக்கைக்குரிய பெயில் தினத்தில் சுலபமாய் தப்பித்தேன். அங்கிருந்து மொரீசியஸ். பழைய நண்பர்கள் சகவாசம். மூன்று வருடங்கள் ஓட்டினேன். கொஞ்சம் உயிர்தெழுந்தேன். இனி சும்மா இருக்க முடியாது. என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்த போதுதான். ஐங்கரனின் தொடர்பு. யாழ்பாணத் தமிழன். வியாபாரம் என்று பெயர் வைத்து எதை வேண்டுமானாலும் செய்யக்கூடியவன். அவன் சொன்ன தகவல் தான் என் ஆர்வத்தை தூண்டியது. சென்னையில் பிரபல நகைக்கடையில் புழங்கும் கணக்கில் வராத கடத்தப்பட்ட வைரங்கள் குறித்த டீடெயில். அதை கேட்ட மாத்திரத்தில் மனம் பரபரவென இருந்தது. பக்காவான கொள்ளைக்கான செயல் திட்டம் வகுத்தேன். டீடெயிலான ஒர்க்கிங் ப்ளான் எழுதினேன்.

அம்சவள்ளியிடம் என்னைப் பற்றி பெரிய பில்டப் செய்து நம்ப வைத்தேன். எனக்காக ஒரு பார்ட்டி ஏற்பாடு செய் என்று ப்ளான் செய்தேன். ஷர்மி மற்றும்

ராஜனைப் பற்றி டீடெயிலான ஒரு ரிப்போர்ட் எடுத்தேன். இரண்டு பேரின் ஆட்டிட்டியூடும் ஹைஃபை. அவர்களை எப்படியாவது என் வலையில் மாட்ட வைக்க வேண்டும் என்று முடிவு செய்தேன். இல்லாத வைரம் காணாமல் போனதாய் பிரச்சனையை  பெரிதாக்கினேன். நிச்சயம் ஷர்மி என் வலையில் மாட்டுவாள் என்று நம்பி இறங்கினேன் மாட்டிக் கொண்டாள்.

பார்த்தால் நிச்சயம் பெரும் பணக்கார ஆட்கள் என்று தெரியக்கூடிய உடல் மொழி, பேச்சு நடத்தை வேண்டும். ஏனென்றால் நான் கொள்ளையடிக்க ப்ளான் செய்திருக்கும் வைரத்தின் மதிப்பு இருபது கோடி.

# 34. ஷர்மி

என்னை சிக்க வைத்து தன் வேலையை முடிக்க திட்டமிட்டிருக்கிறான் என்று நன்றாக புரிந்தது. நான் வசமாய் சிக்கியிருக்கிறேன். ஒரு கட்டத்தில் போடா சொங்கிப் பசங்களா உங்களால முடிஞ்சதை செய்துக்கங்க என்று சொல்லிவிடலாம் என்று தோன்றினாலும், அம்மாவை நினைக்கும் போது அப்படி யோசிக்க முடியவில்லை. எனக்கிருக்கும் ஒரே துணை அம்மா. அவளுக்காகத்தான் எல்லாமே. இந்த பிரச்சனையிலிருந்து வெளியே வர முடியாமல் ஜெயிலுக்கு போனால் மொத்தமுமே க்ளோஸ். வேறு வழியேயில்லை. ‘‘நீ எனக்கு ஹெல்ப் பண்ணுவ இல்லை?’’ என்று நம்பிக்கையாய் ராஜனைப் பார்த்துக் கேட்டேன்.

அவன் என்னையே பார்த்துக் கொண்டிருந்தான். ‘‘சொல்லு ஹெல்ப் பண்ணுற இல்லை?’’ என்று மீண்டும் கேட்டேன்.

‘‘இதெல்லாம் கேட்கணுமா ஷர்மி. ஐ வில் டூ இட்’’ என்றான்.

தன்னால் தான் இவனும் பிரச்சனையில் மாட்டியிருக்கிறான் என்கிற குற்ற உணர்வு ஒரு பக்கமென்றாலும், தனக்காக ஆதங்கப்பட, சண்டையிட, ரிஸ்க் எடுக்க, ஆதரவாய் பேச, அம்மாவுக்கு பிறகு ஒரு ஜீவனை டிபெண்ட் செய்ய ஆரம்பித்திருக்கிறேன் என்றால் அது ராஜனைத்தான். ஏன் என்றே தெரியவில்லை. எது என்னை அவன் பால் ஈர்த்தது என்று விளக்க முடியவில்லை. ஆனால் அவனுடன் பழகிய ஒவ்வொரு நாளிலும், அவன் மேல் நம்பிக்கை அதிகமாகிக் கொண்டேயிருந்ததை உணர்ந்தாள். நிச்சயம் இப்போது அவன் உதவ ஒத்துக் கொண்டிருக்கும் விஷயம் பெரிய ரிஸ்க் தான்.

’’ரெண்டு நாள் எங்களுக்கு டைம் கொடு. உன் ப்ளான் படி செயல்பட எங்களுக்கு கொஞ்சம் தைரியம் வர வழைத்துக் கொள்ள வேண்டும். தினம் அப்டேட் செய்கிறேன். சுப்புவை விட்டுறு பாவம்’’ என்றேன்.

‘‘இனிமேல் நோ ஃபக்கிங் மோட். ஒர்க் மோட் மட்டுமே. பட் விஷயம் முடியும் வரை நான் இங்கேதான் இருப்பேன். என்ன வைரம்? உனக்கு ஏதும் அப்ஜெக்ஷன் இருக்கா?’’ என்று வைரத்தைப் பார்த்துக் கேட்டான். ’’இருந்தா சொல்லித்தான் பாரேன்’’ என்று கெக்கலித்தான். வைரம் எதையும் சொல்லுகிற இடத்தில் இப்போது இல்லை. கேட்கிற இடத்தில் அல்லவா இருக்கிறான்.

காரில் வரும் போது எதுவும் பேசாமலேயே நானும், ராஜனும் வந்தோம். வீடு வந்து சேர்ந்த போது இரவாகியிருந்தது. என்னை ட்ராப் செய்துவிட்டு கிளம்புகிறேன் என்ற போது ‘இங்கேயே தங்கிக்கோயேன். இன்னைக்கு’’ என்றேன். எதுக்கு என்பது போல என்னைப் பார்த்தான். எனக்கு அவன் கூட இருந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. அது என் கண்களில் தெரிந்து வெளிப்பட்டதோ என்னவோ சரி என்று தங்க சம்மதித்தான்.

சுவிக்கியில் இரவு உணவை ஆர்டர் செய்துவிட்டு, அம்மாவுக்கு மாத்திரை மருந்தெல்லாம் கொடுத்துவிட்டு மெல்ல மேலே வந்தேன். தூங்காமல் டிவி பார்த்துக் கொண்டிருந்தான்.

மெல்ல அவன் அருகில் போய் உட்கார்ந்தேன். டிவியை பார்த்தபடி என் தோள் மீது கைப் போட்டு தன்னருகில் இழுத்துக் கொண்டான். எனக்கு மிகவும் பிடித்திருந்தது. போதை, காமம், கிளர்ச்சி ஏதுவுமே இல்லாத ஒரு அணைப்பு. அந்த அணைப்பில் ஒரு பாதுகாப்பை உணர்ந்தேன். அவன் எதையுமே உணராமல் அணைப்பின் இறுக்கத்தை குறைக்காமல் டிவி பார்த்துக் கொண்டேயிருந்தான். நானும் அவன் இடுப்பை இறுக அணைத்துக் கொண்டு அவன் தோளில் முகம் புதைத்து கண் மூடினேன். எத்தனை நேரம் அப்படி இருந்தேன் என்று தெரியவில்லை. கண் விழித்த போது ராஜனின் தோள் மீது படுத்திருந்தேன். அவனின் அணைப்பு கொஞ்சம் கூட விலகவில்லை. சட்டென விலகி,’’சாரி.. கை வலிக்குதா?’’ என்று அவன் தோள்களை பிடித்துவிட்டேன்.

‘‘அதெல்லாம் ஒண்ணுமில்லை. உன் தூக்கத்தை கெடுக்க வேண்டாம்னுதான்’’ என்று சிரித்தான்.

‘‘என்னால தான் உனக்கு எல்லா கஷ்டமும் இல்லை?’’ என்று சொல்லும் போது எனக்கே தெரியாமல் கண்களில் கண்ணீர் வழிய ஆரம்பிக்க, பதறிப் போனான்.

“அடடா.. எதுக்கு அழுவுற?”

”தெரியலை. என்னை கொஞ்சம் அழ விடேன்.” என்று அவனை இறுகக் கட்டிக் கொண்டு அழுதேன். அவன் மீண்டும் வழக்கம் போல் காத்திருந்தான். தலை கோதிவிட்டான். “என்னை திரும்ப தூக்க வைக்க ட்ரை பண்ணுறியா?” என்று கிண்டலாய் அவனை தள்ளிவிட்டு அவன் மேல் படர்ந்து அவனை முத்தமிட்டேன். அவன் முதலில் திகைத்து, ரிலாக்ஸாகி, என் கீழுதட்டை கவ்வி முத்தமிட ஆரம்பித்தான். இதுவரை இத்தனை இண்டிமெசியாய் ராஜனுடன் இருந்ததில்லை. கணக்கு வழக்கிலாமல் புணரப்பட்டிருக்கிறேன். புணர்வை நான் உணர்ந்த முதல் தருணம் இதுதான். இத்தனை சந்தோஷம் தருமா? இத்தனை அழகாயிருக்குமா? வக்கிரமில்லாமல் ஒருவர் மீது ஒருவர் வைத்திருக்கும் அன்பும், காதலும், பெருகி காமமாய் வழிந்தோடிக் கொண்டிருப்பதை உணர்ந்தேன். சந்தோஷமாய் இருந்தேன். ராஜன் புணர்ந்த பெண்கள் அவனைப் பற்றி கூறியதை நினைத்துப் பார்த்தேன். உண்மைதான். நின்னு செய்யுறான். கொஞ்சம் பொறாமையாய்க்கூட இருந்தது. இந்த நிமிடம் என்னுடய எல்லா பிரச்சனைகளும் மறந்திருந்தேன். அப்படியே தூங்கிப் போனோம்.

காலையில் எழுந்த போது ராஜன் அருகில் இல்லை. குளித்து தயாராய் இருந்தான். அரைத்தூக்கத்தில் அவனைப் பார்த்து ‘ஐ லவ் யூ” என்றேன். ”அதெல்லாம் அப்புறம் பண்ணிக்கலாம். முதல்ல குளிச்சிட்டு கிளம்பு. இந்த பிரச்சனையிலேர்ந்து சீக்கிரம் வெளியே வர பாக்கணும்” என்றான் ராஜன்.

# 35. நான்

காரியங்கள் பரபரவென சித்தார்த் சொன்னது போல நடக்க ஆரம்பித்தது. ஈ.சி.ஆர் ரோடு வீட்டில் தங்கியிருந்தாலும், தினம் ஏதாவது ஒரு ஸ்டார் ஓட்டல் லாபியில் சந்தித்துக் கொண்டோம். என்னன்ன செய்ய வேண்டும்? எப்படி? என்றெல்லாம் பாடம் எடுத்தான். மிகத் துல்லியமாய் திட்டங்களையும், எதிர் வரப் போகிற பிரச்சனைகளையும் அலசி வைத்திருந்தான். கேட்ட கேள்விக்கெல்லாம் நம்பும் படியான பதில் சொன்னான். ஒரு கட்டத்தில் அவனின் பேச்சை கேட்கும் போது இதெல்லாம் மிக சாதாரணம் என்கிற எண்ணம் தோன்ற ஆரம்பித்துவிட்டது எனக்கும் ஷர்மிக்கும்.

ஷர்மியிடம் ஆரம்பத்திலிருந்த பதட்டம் கொஞ்சம் கூட இல்லாமல் போய்விட்டது போலத் தோன்றியது. மிகவும் ஆர்வமாய் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டாள். இந்த ஒரு கொள்ளையின் மூலம் நிச்சயம் பெரிதாய் செட்டில் ஆகிவிடவேண்டும் என்கிற பேராசை அவளின் பேச்சில், கண்களில் தெரிந்தது எனக்கு பயமாய் இருந்தது. பணத்துக்காக தன்னை இழந்தவள். எதையாவது செய்து நாலு காசு பார்க்க வேண்டும் என்பறகாக எதையும் செய்ய தயாராக இருக்கிறவளுக்காக நான் ஏன் ஒத்துழைக்க வேண்டும்?. இவளின் மீதுள்ளது காதலா? எதை வைத்துக் காதல். உடல் சார்ந்தா? இல்லை மனம் சார்ந்தா? உடல் என்றால் இருவருமே உச்சபட்சமாய் அதில் எக்ஸ்போஸ் ஆனவர்கள். மனம் சார்ந்து என்றால் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். கடந்த மாதங்களில் எங்கள் இருவருக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் உறவுக்கு பெயர் என்ன என்று யோசித்துக் கொண்டேயிருந்தாலும், இருவரும் சேர்ந்து இருப்பது பிடித்திருக்கிறது. தூங்கி எழுந்து “ஐ லவ் யூ” என்று ஷர்மி சொன்ன போது கொஞ்சம் கிளர்ச்சியாய்க் கூட இருந்தது. ஆனால் இது காதலிக்கும் நேரமில்லை .

‘‘யூ டோண்ட் லவ் மீ’’ என்ற பாவமாய் முகத்தை வைத்துக் கேட்டவளை எழுப்பி, சீக்கிரம் வா.. வா என்று கிளம்பினேன். நானும் அவளை விரும்புகிறேன் என்று சொல்ல ஏதோ தடுக்கிறது. அது அவள் மேல் இன்னும் முழுதாய் வராத நம்பிக்கையாய் கூட இருக்கலாம் என்று தோன்றியது.

வேளச்சேரியில் இருக்கும் பளேடியத்துக்கு ஒரு நடை போய் வந்து உயர்தர ஆடைகள் இரண்டு செட் எடுத்துக் கொண்டேன். ரெண்டு செட் லெனன் ஷர்ட் அண்ட் பேண்ட், கேஷுவல் புட்வேர் என கிட்டத்தட்ட ஒரு லட்ச ரூபாய்க்கு பர்சேஸ். செய்தேன். அதே போல ஷர்மிக்கும் டிசைனர் வேர். ப்ளாட்டினம் ஜுவல்லரி என தனி பர்சேஸ் ஓடியது.

‘‘கார் ஓட்டத் தெரியுமா? ‘‘

‘‘ம்’’

‘‘அப்ப நாளைக்கு நான் சொல்லுற எடத்துக்குப் போய் ஒரு கார் எடுத்துக்க. என் நண்பருடய கார். பெரிய இடம். நீ இரவல் வாங்கப் போகும் கார் ஜாகுவர் ஹை எண்ட். கேரளா ரிஜிஸ்ட்ரேஷன். ஓனர் பேரு என்ன ஏதுங்கிர டீடெயில் இந்த பேப்பர்ல இருக்கு. மனப்பாடம் செய்துக்க. இப்போ அந்த வண்டி அவங்களுது இல்லை ஒரு வாரத்துக்கு முன்னாடி வித்துட்டாங்க. இன்னும் நேம் ட்ரான்ஸ்பர் பண்ணலை. ரெண்டு நாளைக்கு நீ ஜாகுவார் ராஜா’’

அடுத்த சில மணி நேரங்களில் நான் ஹை எண்ட் ஜாகுவாரில் சென்னையை வளம் வர ஆரம்பித்தேன். காரைப் பார்த்த ஷர்மி உற்சாகமாகி குதூகலித்தாள். எந்த காரணம் கொண்டும் அவளை உன் வண்டியில் ஏற்றாதே. இந்த பிரச்சனையை பொறுத்தவரை நீ யாரோ அவள் யாரோ என்றிருக்கிறான் சித்தார்த். அதனால் காரை எட்டிப் பார்க்க மட்டுமே அனுமதித்தான்.

‘‘ஏத்தாட்டி விடு. நானே எனக்கே எனக்குன்னு ஒண்ணை வாங்கிக்கிறேன்’’ என்று சிரித்து கட்டிக் கொண்டாள். ‘எனக்கே எனக்கு’’ இவளுக்கு ஏன் நான் உதவ வேண்டும்?. இப்போது கூட ஒண்ணும் குறைந்து போய்விடவில்லை. அவள் பிரச்சனை நீயே பார்த்துக் கொள் என்று சொல்லிவிட்டு எஸ்ஸாகிவிட்டால், நாளொரு கூட்டம், நாளொரு ஓல் என வாழ்க்கை தாக்கத்

இருக்கும் வரை போகும் என்று தோன்றினாலும் ‘‘நீ வாங்கு செல்லம்’ என்றேன்.

நாளைக் காலை ‘‘டி’’டே. ஷர்மியும் நானும் கொஞ்சம் பதட்டமாகவே இருந்தோம். என்னை அணைத்தபடி படுத்துக் கிடந்தாள். ‘‘மாட்டிக்கிட்டா என்னை பெயில் எடுத்து காப்பாத்துவியா?

‘‘நெகட்டிவா பேசாத.’

‘‘அதுக்காக இல்லை. ஒரு வேளை அப்படி ஏதாச்சும் ஆச்சுன்னா. உன்னைத்தான் நம்பியிருக்கேன். நம்பலாமில்லை?’’ என்றதும் என் அணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட ஷர்மி முகத்தில் எந்தவிதமான மாற்றமும் இல்லாமல் ‘‘நம்பிக்கையில்லைன்னா வேணாம் என் பிரச்சனைய நான் பார்த்துக்கறேன்’’ என்றாள்.

இப்படி சட்டென சொல்வாள் என்று எதிர்பாக்கவில்லை.

‘‘இல்லை ஷர்மி..’’ என்று இழுத்தேன்.

‘‘ஒண்ணும் சொல்ல வேண்டாம் ராஜன். என்னடா நமக்கு சம்பந்தமேயில்லாத ஒரு பிரச்சனையில ஏதோ பழகிட்டோமேனு தலைவிட்டுட்டோம்னு பயமாயிருக்கா? அது தப்பு இல்லை. ஏன்னா நாம ரெண்டு பேருமே சரியில்லாதவங்க. பணம் வசதிக்காக, மாரல் வேல்யூ இல்லாதவங்க. நம்ம ரெண்டு பேருக்குள்ள நம்பிக்கை இருக்கணும்னு நினைக்கிறேதே லக்சரிதான். உனக்கு என்னை பிடிச்சிருக்கா இல்லையானு தெரியாது. பட் எனக்கு உன்னை பிடிச்சிருக்கு. உன் கூட இருக்குற டைம் சந்தோஷமா, நம்பிக்கையா இருக்கு. எனக்காக நீ சண்டை போடும் அந்த நிமிஷமே செத்துரலாமான்னு கூட தோணுது. இதோ இவ்வளவு நேரம் உன் கூட படுத்துட்டிருந்தேனே. அத்தனை பாதுகாப்பா ஃபீல் பண்ணேன். லவ் பண்ணுறேன். இதை செய்ய விரும்பலைன்னு நீ சொன்னாக்கூட. ஒரு வேளை நீ சொல்லுறா மாதிரி உனக்கு பதிலா யாரையாவது வச்சி அதுல நான் மாட்டிக்கிட்டேன்னா.. நீ இருக்க வெளிய நிச்சயம் காப்பாத்துவன்னு நம்புவேன். ஏன்னா ஐ லவ் யூ’’ என்று சொல்லி என்னை இறுக அணைத்து முத்த கொடுத்தாள். கரண்ட் ஷாக் அடித்தது போல இருந்தது.

# 36. நான்

***"முத்தமிடுகையில் பன்னிரெண்டு வோல்ட் மின்சாரம் நரம்பெல்லாம் ஊடுருவி, பளிச்சென விளக்கெறிந்தது போல் ஆகுமா? ஷர்மி முத்தமிட்டால் ஆகும். அப்படி ஒரு முத்தத்தை கொடுத்துவிட்டு "எனக்காக இந்தச் சின்னத் திருட்டைக்கூட செய்ய மாட்டாயா?" என்று மடியின் மேல் உட்கார்ந்தபடி கேட்பவளுக்கு மாட்டேன் என்று நீங்கள் சொல்வீர்கள் என்றால்.. நீங்கள் பெரிய ஆள் தான் சார். ஆனால் நான் சாதாரணன். "உனக்காக என்ன வேண்டுமென்றாலும் செய்வேன்" என்று ஷாக்கடித்த கிக்கிலிருந்து வெளியே வராமல் சொன்னதன் விளைவுதான் சென்னையின் மிக முக்கியமான, பெரும் பணக்காரர்களுக்கான வைரம் விற்கும் கடை வாசலில் நிற்கிறேன்."***

சென்னையின் மிக முக்கியமான உயர்தர நகைக்கடை இது. மொத்தம் 13 மாடி கொண்டது. எல்லாமுமே இவர்கள் தான் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அத்தனை பெரிய கடை. பிரபல தாதாவின் பின்னணி என்றெல்லாம் புரளி இருக்கிறது. அந்தக்கடையில் நான் திருடப் போகிறேன் என்று நினைக்கும் போது லேசாய் உள்ளுக்குள் நடக்கப் போகிறது. ஆனால் சித்தார்த் சொன்னது போலவே எல்லாம் நடந்தால் இதெல்லாம் ஒரு ஜுஜுபி வேலை என்ற நம்பிக்கையும் இருக்கத்தான் செய்தது.

என்னுடய ஜாகுவாரை நானே ஓட்டிக் கொண்டு அந்த கடையில் மேடேறிய லாபியில் நிறுத்தினேன். தேவையேயில்லாத ராஜ பரிபாலன தலைப்பா கட்டிய வாட்ச்மேன் அதீத பவ்யத்தோடு என் கார் கதவை திறந்து விட்டான். வேலட் பார்க்கிங்கின் சீட்டை என்னிடம் கொடுத்தான். வாங்கிக் கொண்டு என் பாக்கெட்டிலிருந்து சூவிங் கம்மை எடுத்து போட்டுக் கொண்டேன். அக்கடையின் முகப்பில் நின்று ஒரு பார்வை பார்த்துவிட்டு, மெல்ல கடைக்குள் நுழைந்தேன். வாசலிலேயே வரவேற்க பட்டை வைத்து புடவை கட்டியிருந்த அழகிய நேப்பாளப் பெண் மூக்காலேயே "மே ஐ ஹெல்ப் யூ சார்?" என்று உதவத் தயாரானாள். நான் அவளை நிராகரித்தேன். ஆனாலும் மெதுவாய் என்னை பின் தொடர்ந்தாள். சுற்றும் முற்றும் பார்த்தேன். விதவிதமான நகைகள் ஷோக்கேஸுகளில்

அணிவகுத்திருந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாய் உயர்தர பட்டில் சில மாமிகளும், சில்கி கவுனில் இரண்டு நடுத்தர பெண்களும் நகை பார்த்துக் கொண்டிருந்தார்கள். நான் யாரையும் கேட்காமல் சுற்றிப் பார்த்துக் கொண்டிருப்பதை கவனித்த ப்ளோர் மேனேஜர் மிக பவ்யமாய் ‘‘என்ன பார்குறீங்க சார்?’’ என்று வினவினான்.

‘‘லுக்கிங் ஃபார் டைமெண்ட்ஸ். எக்ஸ்க்ளூசிவ்’’ என்றேன். என்னுடைய ஆங்கில ஆக்செண்ட் தடுமாற்றமில்லாமல் சிறப்பாய் ஒலித்தது குறித்து நானே என்னை மெச்சிக் கொண்டேன். இந்த ஆங்கிலம் எல்லாம் என் தொழில் கற்றுக் கொடுத்தது. செய்யும் வேலை ஆதி உலக வேலை என்றாலும், வேலை பழகியவர்கள் ஹைஃபை என்பதால் நானும் என்னை ஹைஃபையாக மாற்றிக் கொண்டாலேயன்றி சர்வைவ் செய்ய முடியாது. என் யோகா எப்படி என் தொழிலுக்கு மூலதனோ? அது போலத்தான் ஆங்கிலமும். பல சமயங்களில் முனகல்களையும், கெட்ட வார்த்தைகளையும் ஆங்கிலத்தில் கேட்டால் உறுத்துவதேயில்லை. ஆனால் கெட்ட வார்த்தைகள் எல்லா மொழிகளிலும் கெட்ட வார்த்தைகளே.

’’டைமண்ட் எக்ஸ்க்ளூசிவ்.. வாங்க சார்’’ என என்னை லிப்ட்டில் அழைத்துப் போனான். எட்டாவது ப்ளோரில் கீழே பார்த்த அதே பிரம்மாண்டமான ஹாலில் எல்லா சுவர்களிலும் வைரமாய் ஜொலித்தது. மேனேஜர் அங்கிருந்த ஒரு சேல்ஸ் மேனிடம் என்னை ஒப்படைத்துவிட்டு, ‘‘ஹிவில் ஹெல்ப்யூ சார்’’ என்று விலகினான். நான் சேல்ஸ்மேனைப் பார்த்தேன். சிநேகமாய் சிரித்தான். நானும். ‘‘என்ன பார்க்குறீர்கள்?’’ என்று வினவினான். ‘‘ரிங்’’ என்றேன். டிஸ்ப்ளேவில் இருந்த ஒரு ட்ரேயை பார்த்தேன். புரிந்து கொண்டு அதை எடுத்து வர போனான்.

அதற்கு முன் அவர்கள் வைத்திருக்கும் செட்டப்பைப் பற்றி சொல்ல வேண்டும். வழக்கமாய் நகைக்கடைகளில் சுவர்களில் டிஸ்ப்ளே இல்லாமல், விற்பனையாளருக்கும் நமக்குமிடையே ஒரு டிஸ்ப்ளே டேபிள் வேறு வைத்திருப்பார்கள். ஆனால் இங்கே அப்படியில்லை. சுவற்றில் உள்ளது மட்டுமே கீழே ஒரு டேபிள் அதை சுற்றி உயர்தர சோபாக்கள். நமக்கும் சேல்ஸ்மேன் பக்கம் ஓர் சின்ன சோபா. கிட்டதட்ட கார்பரேட் ஸ்டைல்

விற்பனை. வாங்குகிறவனை உலகின் முக்கியமானவனாய் உணர வைக்கப்பட்டு, தன் ப்ராடெக்டை அவன் தலையில் கட்டும் முறை.

சுவற்றிலிருந்து எடுக்கப்பட்ட ட்ரேவை என் முன்னால் வைத்தான். ப்ளாட்டினத்தில், தங்கத்தில் பொதிக்கப்பட்ட வைரங்கள். சிறு துணுக்கிலிருந்து சுண்டு விரல் நகம் சைஸ் வரை வைரம் பொதிக்கப்பட்ட மோதிரங்கள். ஒரு சில மோதிரங்களில் இரண்டு மூன்று துணுக்குகளை மிகவும் கலை நேர்த்தியாய் பொதித்த வைர மோதிரங்கள் பார்ப்பதற்கே ஆசையை தூண்டியது. ஒரு சிலதை மட்டுமே தேர்தெடுத்து தனியாய் அதை டிஸ்ப்ளேயிலிருந்து வெளியே எடுத்துக் காட்டச் சொன்னேன். அதில் ஒன்றை தேர்தெடுத்து சிறிது நேரம் அதையே பார்த்து கொண்டிருந்துவிட்டு, ‘‘எத்தன கேரட்?’’ என்று சேல்ஸ்மேனை நிமிர்ந்து பார்த்தேன்.

அவன் தன் கையிலிருந்த ஒரு ஸ்கேனரை மோதிரத்தோடு ஒட்டியிருந்த பார்கோடை ஸ்கேன் செய்தான். அவனது போன் டிஸ்ப்ளேயில் அந்த மோதிரத்தின் ஜாதகம் வந்தது. வழக்கமான 24 கேரட் தான். அதை படித்ததும் உதட்டை பிதுக்கினேன். ‘‘ஐ வாண்ட் எக்ஸ்க்ளூசிவ்’’ என்றேன். அவன் ஏதோ சொல்ல வாயெடுத்த போது என் போன் அடித்தது. போன் எடுத்து பேசினேன். எதிர் முனையில் வெளிநாட்டுக்காரன் குரல். நூறு மில்லியன் டாலருக்கான டீல் பேசினான். நான் ‘‘ம்’.. ‘‘ம்’ என்று சொல்லிக் கொண்டேயிருந்தேன். ‘‘நூறு மில்லியன் எல்லாம் லீகலாய் செய்ய சாத்தியமில்லை. ஆல்டர்நேட் ஏற்பாடு செய்துவிட்டு சொல்கிறேன் என்று போனை வைத்தேன். கூப்பிட்டவன் யாரென்று தெரியாது. நம்பர் கூட ஐ.பி கால். சித்தார்த் சொல்லியிருந்தான். உள்நுழைந்து அரை மணி நேரத்திற்குள் உனக்கு போன் வரும் என்றிருந்தான். சரியாய் வந்தது குறித்து ஆச்சர்யமாகவும், எங்காவது உக்கார்ந்து கொண்டு என்னை வாட்ச் செய்கிறானோ என்ற பயம் கூட வந்தது. அவனின் ப்ளானிங்கில் மேல் நம்பிக்கையும் அதிகரித்தது.

‘‘இந்த டிசைன்கள் எல்லாமே எக்ஸ்க்ளூசிவ் தான் சார். உயர் தர வைரங்களைக் கொண்டு அமைத்த டிசைன்.’ என்று அதீத பவ்யத்தோடு. நான் லேசாய் தலையசைத்தபடி, ‘‘கால் யூர் ப்ளோர் மேனேஜர்’’ என்றேன். அவனுக்குள் சற்றே கலவரத்தை உணர்ந்தேன். ‘‘எனி ப்ராப்ளம் சார்? நானே

உங்களுக்கு உதவுகிறேன்'' என்று மீண்டும் தயவு கூர்ந்து என்ற தொனியில் கேட்டான் சேல்ஸ்மேன்.

''இல்லை எனக்கு எக்ஸ்க்ளூசிவான வைரம் வேண்டும். பட்ஜெட் பற்றி கவலையில்லை. சம்திங் ஸ்பெஷல்'' என்றேன்.

சேல்ஸ் மேன் மெல்ல சத்தமில்லாமல் தன் போனை எடுத்து பேசும் சத்தம் கேட்காமல் மேனேஜரை அழைத்தான். ஷூவின் 'டக் டக்' சத்தத்தை தவிர வேறேதும் அந்த ஹாலில் கேட்கவேயில்லை. பொறுமையாய் சுவிங்கத்தை மென்று கொண்டு காத்திருந்தேன். ''எஸ் ஸார்.'' என்று வந்து நின்றான் ப்ளோர் மேனேஜர்.

''ஸீ.. எனக்கு தனித்துவமான எனக்கே எனக்கு மட்டுமான வைரம் வேண்டும். மிக முக்கியமானவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டியது. விலை பற்றி நோ ஒர்ரி. உங்களிடம் மட்டுமே அம்மாதிரியான உயர்தர வைரங்கள் கிடைக்கும் என்று தெரியும். தெரிந்துதான் வந்திருக்கிறேன். உடனடியாய் துபாய் போக நேரமில்லை. இல்லாவிட்டால் என்னால் அரேஞ் செய்ய முடியும். உங்களால் உங்களுடய பர்சனல் எக்ஸ்க்ளூசிவ் வைரத்தை காட்ட முடியுமா?''

ப்ளோர் மேனேஜருக்கு புரிந்தது. சிறிது நேரம் அமைதியாய் என்னைப் பார்த்து கொண்டிருந்துவிட்டு தன் போனை எடுத்து ரகசியமாய் பேசினான். ''ம்..ம்' என்று தலையாட்டி விட்டு ''சார். பிளீஸ் கம்'' என்று என்னை மீண்டும் லிப்ட்டுக்கு அழைத்துப் போனான். 13 மாடியில் உள்ள ஓர் அறையில் என்னை அமர வைத்துவிட்டு, உள்ளே போக தன் கைரேகையை அறையின் வாசலில் இருந்த கருவியில் பதிவிட்டு, கதவை திறந்து உள்ளே போய்விட்டு சில நிமிடங்களில் கதவு திறந்து எட்டிப் பார்த்து ''வாருங்கள்'' என்றான். கீழ் ஹால்களில் இருந்தது போலில்லாமல் இங்கே ஒரே ஒரு சி.சி.டி.விதான் இருந்தது. சித்தார்த் சொல்லியிருந்தான்.

''சார் தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம். உங்கள் ஐடியை காட்ட முடியுமா?'' என்று கேட்டான்.

என்னுடய ஐடியை எடுத்துக் கொடுத்தேன். உள்ளே போனவன் சிறிது நேரத்தில் திரும்ப வந்தான். ''சாரி. ஹைஃப்ரோபைல் டீல் பேக்ரவுண்ட் முக்கியம்' என்று மன்னிப்பாய் பேசினான். ஐடியும் சித்தார்த் தயாரிப்பு.

என்னைப் பற்றி நான் கொடுக்கும் எல்லா தகவல்களையும் ஊர்ஜிதப்படுத்த பல ஏற்பாடுகளை செய்திருப்பதாகவும், அதை நீ நடந்து கொள்ளும் முறையில் நிஜமாக்க வேண்டும் என்பது மட்டுமே உன் வேலை என்று சொல்லியிருந்தான். அவன் எதிர்பார்த்த அனைத்து விஷயங்களும் நடந்து கொண்டேயிருந்தது ஆச்சர்யமாய் இருந்தது.

பல நாடுகளில் ஏற்றுமதி இறக்குமதி பிஸினெஸ். அங்கிருக்கும் அட்ரஸ் ப்ரூப். காண்டேக் நம்பர் என எல்லாவற்றையும் இண்டர்நெட்டில் செக் செய்தால் டீடெயிலாய் வரும் படி செய்திருந்தான். இண்டர்நெட்டில் இது வரை எனக்கென்று எந்த விதமான ஷோசியல் நெட்வொர்க் அக்கவுண்டும் இல்லை என்று சொன்ன போது சித்தார்த் உற்சாகத்தில் குதித்தான். அப்படி இருக்கும் பட்சத்தில் இண்டர்நெட்டில் என்னுடய ட்ரேஸை அழிப்பது மிகவும் கடினமென்றும். எங்காவது ஓரிடத்தில் சிக்க வாய்ப்பு அதிகமென்றும் சொன்னான். பேங்க் அக்கவுண்டில் கூட என் ராமசந்திரராஜன் என்கிற ஒரிஜன்ல் பெயரில் தான் இருக்கும். அக்கவுண்டில் சில ஆயிரங்களே இருக்கும். ஆதார் கார்டை தவிர வேறேதும் அவனுக்கும் அரசிற்குமான தொடர்புடைய விஷயங்கள் ஏதுவுமே இல்லை என்பதை சித்தார்த்திடம் பேசும் தான் உணர்ந்தேன்.

என்னதான் சித்தார்த சொல்வது போலவே நடந்தாலும் உள்ளுக்குள் லேசான பதட்டம் இருக்கத்தான் செய்தது. சுவிங்கத்தை மேலும் மெல்ல ஆரம்பித்தேன். உள்ளிருந்து மேனேஜர் வெளியே மென் சிரிப்போடு வெளியே வந்தான். ஆல் ஓக்கே. .ஸ்டார்ட் மீசிக் என்றது மனம்.

# 37. நான்

மேனேஜர் என்னை அழைத்துக் கொண்டு போன அறை மிகச் சிறியது. கீழே போடப்பட்டிருந்த அதே முறையில் டேபிளும் சோபாவும் போடப்பட்டிருக்க, டேபிளின் மேல் டாப் லைட்டில் ஒளி பாய்ந்து கொண்டிருந்தது. மேனேஜர் திரும்பி வரும் வரை கொஞ்சம் பதட்டமாகவே இருந்தது. சுற்றியும் பார்த்தேன். அந்த அறையில் ஒர் சுழலும் சி.சி.டி.வி கேமரா இருந்தது. வலதிலிருந்து இடதுக்கும், இடதிலிருந்து வலதிற்குமாய் திரும்ப கிட்டத்தட்ட 45 செகண்ட் எடுத்துக் கொண்டது. என்னதான் பதட்டம் இருந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளக் கூடாது என்பதை திரும்பத் திரும்ப பாடமாய் சொல்லி அனுப்பப் பட்டிருக்கிறேன். கேஷுவலாய் கால் மேல் கால் போட்டு அமர்ந்தேன். சோபா முழுக்க, இரண்டு கைகளை விரித்து கம்பீரமாய் சூவிங்கம் மென்றபடி அமர்ந்திருந்தேன்.

மேனேஜர் வரும் போது சிரித்த முகத்துடன் வந்தான். என்னைப் பற்றி தீர விசாரித்து நம்பகம் வந்துவிட்டது போல. நானும் சிரித்தேன். சேல்ஸ்மேன் தன் கையில் இரண்டு ட்ரேக்களை கொண்டு வந்தான். வெல்வெட் பொதி போன்ற குட்டி சுருக்குப் பையை திறந்து, எனக்கு முன்னால் அதை காட்டி விட்டு, டேபிளின் மேல் போட்டிருந்த வெல்வெட் ட்ரேயில் மெல்ல, பையிலிருந்து விடுவித்தான். பையிலிருந்து மெல்ல, விடுவிக்கப்பட்ட நட்சத்திரங்களாய் வைரங்கள் டாப் லைட்டின் உபயத்தில் வண்ணப் பிரிகைகாளாய் தெரிய உடலெங்கும் லேசான சிலிர்ப்பு ஓடியது. மொத்தம் 20 கற்கள். நான் என் பாக்கெட்டிலிருந்து இன்னொரு சுவிங்கத்தை எடுத்துப் போட்டுக் கொண்டேன். கவரை எடுத்து என் இன்னொரு பாக்கெட்டில் போட்டுக் கொண்டேன். என்னுடைய ஒவ்வொரு நடவடிக்கையையும் சேல்ஸ்மேனும் மேனேஜரும் கூர்மையாய் கவனித்துக் கொண்டேயிருந்தார்கள்.

ஒவ்வொரு வைரத்தையும் என்னிடம் காட்டி, அதை கண்களில் மாட்டி பார்க்கும் லோப் எனும் பூதக்கண்ணாடியை அளித்தான். நான் தேர்ந்தவன் போல என்னுடய வலது கண்ணில் அதை மாட்டிக் கொண்டு, அவன் கொடுத்த ட்வீஸரின் முனையில் வைரத்தை, ட்ரேயின் மேல் போல பிடித்துக் கொண்டு, கண்களுக்கு அருகில் வைத்து பார்த்தேன். பூதக்கண்ணாடியின் மூலமாய் பெரிதாக்கப்பட்ட வைரத்தின் கட் செய்யப்பட்ட டிசைன் இன்னும் துல்லியமாய் தெரிந்தது. இது எத்தனை கேரட்?. எவ்வளவு ஓர்த்? இதன் கட்டில் இருக்கும் சிறப்பு? என எல்லாம் பார்க்க எனக்கு நேரமில்லை. இதில் ஒரு கல்லை எடுத்து வரத்தான் இத்தனை முஸ்தீபுகள். ஆனால் இது எல்லாம் தெரிந்தார்ப் போல காட்ட வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அவசரப்படக்கூடாது என்று சொல்லிக் கொடுக்கப்பட்டிருக்கிறேன்.

ஒவ்வோர் கல்லாய் எடுத்துப் பார்த்து, தீவிரமாய் ஆராய்வது போல நடித்து, அதை மீண்டும் அதே இடத்தில் வைத்தேன். “எனக்கு எதுவும் பிடிக்கலை” என்றேன். அவர்கள் முகத்தில் ஓர் ஏமாற்றம் இருந்தது. சேல்ஸ் மேன் ஒவ்வொரு வைரமாய் மீண்டும் அந்த வெல்வெட் பொதிக்கும் அருகில் இருந்த மேனேஜரிடம் காட்டி உள்ளே போட்டுக் கொண்டிருந்தான். “நான் கிளம்பட்டுமா?” என்று எழுந்த போது மேனேஜரின் கை என் தோளில் அழுத்தி உட்கார வைத்தது. “சார். ஒரு டயமண்ட் குறையுது சார்” என்றான் சேல்ஸ் மேன்.

# 38. அவர்கள்

சேல்ஸ் மேன் சொன்ன போது திடுக்கென மேனேஜர் விழித்தான். ராஜனிடமிருந்து பெரிய ரியாக்ஷன் ஏதுமில்லை. மேனேஜர் சேல்ஸ்மேனிடம் திரும்ப எண்ணிப் பார் என்று சொல்ல, மீண்டும் அவன் எல்லாக் கற்களையும் ட்ரேயில் போட்டு ஒவ்வொன்றாய் எடுத்து வெல்வெட் பையினுள் போட்டு எண்ணிப் பார்த்தான். “பத்தொன்பதுதான் சார் இருக்கு?” என்ற அவன் குரலில் லேசான நடுக்கம் இருந்தது. ராஜனின் முகத்தில் லேசான கலவரம் தெரிந்தாலும் பெரிதாய் காட்டிக் கொள்ளாமல் “ஒரு வேளை அவ்வளவு தான் இருந்துச்சோ என்னவோ?” என்றான் சாதாரணமாய்.

”இல்லை சார். எல்லாமே கணக்கு இருக்கு. எடுத்துட்டு வரும் போது செக் செய்திட்டுத்தான் எடுத்துட்டு வருவோம். கொஞ்சம் எழுந்திருங்க. உங்களை செக் செய்யணும்” என்றான்.

”யாரை செக் பண்ணனும்னு சொல்றீங்க? டு யூ நோ ஹூ ஐயம்?’ என்று கத்தினான்.

“சார். இது தான் பார்மாலிட்டி. எடுத்துட்டு வந்ததே உங்களுக்காகத்தான். ஸோ. ப்ளீஸ் கோவாபரேட் பண்ணுங்க” என்று மேனேஜரின் குரலில் அழுத்தம் இருந்ததை உணர்ந்து இரண்டு கைகளையும் விரித்து “கமான் செக்மீ” என்றான் ராஜன்.

அவனைத் தடவி, பாக்கெட்டில் எல்லாம் கை விட்டு, செக் செய்தான். “நீங்க என்ன அவமானப்படுத்துறீங்க?” என்றான் ராஜன்.

”வேற வழியில்லை சார். செக் செய்துதான் ஆகணும்.” என்றபடி “கொஞ்சம் சட்டைய கழட்டுறீங்களா?” என்றான் மேனேஜர்.

ராஜனுக்கு கோபம் வந்தது. “என்ன நினைச்சிட்டிருக்கீங்க? நீங்க?”

“சார். தொலைஞ்சது வைரம். அத பாக்கெட்டுல இல்லை உடம்புல எங்க வேணா வைக்கலாம்” என்றான் கூலாய். முன்பிருந்த அன்பு ஒழுகும் தொனி அவனிடத்தில் இப்போது இல்லை.

”நான் கழட்டமாட்டேன்” என்று அடம் பிடித்தான்.

மேனேஜர் போனை எடுத்து “சார் கஸ்டமர் கோவாப்ரேட் பண்ண மாட்டேன்குறாரு” என்றான். எந்த விதமான முன் டீடெயிலும் சொல்லாமல்.

“அலோ.. என்ன நீங்க அக்யூஸ்டாவே அக்குறீங்க? நான் என்ன கோவாப்ரேட் பண்ணலை?”

“சார். தொலைஞ்சது 20 கோடி ரூபா மதிப்புள்ள வைரம். எல்லாருக்கும் அதை ஈஸியா காட்டிற மாட்டோம். உங்க பேக்ரவுண்ட் எல்லாம் செக் செய்துதான் உள்ளேயே விடுவோம். அதையும் மீறி காணாம போயிருக்கு. உண்மைய சொல்லுங்க” என்று விசாரணை மோடுக்கு வந்தான்.

“மிஸ்டர். நான் எடுக்கலை. நீங்க வேணும்னா சி.சி.டிவி புட்டேஜ் இருக்கு இல்லை அத போட்டுப் பாருங்க ” என்றான் புத்திசாலித்தனமாய். ராஜன் பேசிக் கொண்டிருக்கும் போதே இரண்டு பாடி கார்டுகள் உள்நுழைந்து அந்த சின்ன ரூமை நெருக்கடியாக்கினார்கள்.

ராஜன் முகத்தில் கலவரம் அதிகமானது. அதே நேரத்தில் சி.சி.டி.வி புட்டேஜை ரீவைண்ட் செய்து மறுபடி மறுபடி பார்க்கப்பட்டது. வலதிலிருந்து இடதாய் கேமரா அதன் போக்கில் போய்க் கொண்டேயிருந்ததில் ஒரு ப்ரேமில் கூட ராஜன் வைரத்தை எடுத்ததாய் காட்சியில்லை. கடை ஓனருக்கு தகவல் சொல்லப்பட, “அவன் யாரா இருந்தாலும் உறிச்சு பார்த்திருங்க” என்றார். பாடிகார்டுகள் ராஜனை நெருங்கி “உங்க ட்ரஸை கழட்டுங்க” என்றார்கள். ராஜனுக்கு கோபம் பெரிதாய் வெடித்தது.

”என்னங்கடா.. ரொம்ப சீன் போட்டுட்டே போறீங்க.” என்று என்று ராஜன் எகிறிய அடுத்த நொடி “தட்’ என அவன் தாடையில் பாடிகார்டின் முஷ்டி வெடித்தது. ஒரு கணம் அவனுக்கு என்ன நடந்தது என்றே புரியவில்லை. கிறுகிறுவென இருந்தது. தாடையின் உட்புறத்தில் ரத்தம் வடிவது உணர்ந்து வாயில் கை வைத்து, விரலை வெளியே எடுத்து விரலெல்லாம் ரத்தமாய் இருப்பதை உணர்ந்து கண்கள் விரிய பயந்தான். அவன் இதை நிச்சயமாய்

எதிர்பார்க்கவில்லை. “யூ.. யு. இதோ பார் நான் போலீஸுக்கு போவேன்” என்று தன் போனை எடுத்து டயல் செய்ய போக, இன்னொரு பாடிகார்ட் அதை தன் காலால் தட்டிவிட்டான்.

”தோ பாருங்க சார். கொஞ்சம் கோவாப்ரேட் பண்ணீங்கன்னா.. நாங்க எங்க செக்கிங்கை முடிச்சிருவோம்.” என்று கன்னத்தில் அடித்த பாடிகார்ட் மிக இனிமையாய் பேசினான். வேறு வழியில்லாமல் ராஜன் தன் உடைகளை கழட்ட ஆரம்பித்தான். ஒவ்வொரு உடையாய் கழட்டி டேபிளின் மேல் வைத்துவிட்டு, பாடி கார்டை நிமிர்ந்து பார்த்தான். நிர்வாணமாய் நிற்பது அவனுக்கு பெரிதாய் உறுத்தவேயில்லை என்பதை மேனேஜரும், சேல்ஸ் மேனும் உணர்ந்தார்கள். கதவு தட்டப்பட, மேனேஜர் கதவை திறந்து உள்ளே வந்தவரை பார்த்து “இவருதான் சார் கஸ்டமர்” என்று ராஜனைப் நோக்கி கை நீட்டினார்.

“எல்லாம் செக் பண்ணித்தானே விட்டீங்க?”

“ஆமாசார்.. எல்லா ரொட்டீனும் செக் பண்ணியாச்சு. இப்ப கூட அவரோட துபாய் காண்டேக், இங்க சென்னையில தங்கியிருக்கிற ஹோட்டல் காண்டேக்ட் எல்லாம் செக் பண்ணியாச்சு. ஜெனியூன். பட் ஒரு வைரம் காணலை.” சித்தார்த் மிக துல்லியம்.

“சார்.. நான் எதுவுமே பண்ணலை. முதல்ல அவங்க சரியாய் செக் பண்ணி கொண்டு வந்தாங்களானு கேளுங்க சார்.” என்றான் ராஜன்.

செல் போன் எடுத்து “பாய். எல்லாம் வெரிபிகேஷனும் செக் செய்தாயிற்று. எல்லாமே சரி. நம்ம ஆட்களும் செக் பண்ணித்தான் எடுத்துட்டு வந்திருக்காங்க. சி.சி.டிவி. செக் பண்ணியாச்சு. ஆளை நங்கா பண்ணி பார்த்தாச்சு. வேறேதும் கிடைக்கலை. ரூமுல எங்கயாச்சும் விழ சான்ஸே இல்லை. இருந்தாலும் புல்லா செக் பண்ணிரலாம்னு தோணுது. வேற என்ன பண்ண?” என்று கேட்டான்.

”மேனேஜரிடம் போனைக் கொடு என்று சொல்லியிருக்க வேண்டும். மேனேஜர் மிக பவ்யமாய் போனை வாங்கி பேசினான். “ஆமா சார். அவர்கிட்ட ஏதும் இல்லை. அஸ்ஸி பீஸு தான் சார். ஆனால் அக்கவுண்டுல வராது. லிஸ்டுல இருக்கு” என்றான். எதிர்முனை அமைதியாய் இருந்தது.

''சரி சார் பண்ணிடறேன்'' என்று சொல்லி போனை வந்தவரிடம் கொடுத்துவிட்டு, ராஜனின் உடலை செக் செய்தான். ஆசனவாய், காது, விரலிடுக்குகள் ஆண்குறியினுள் என எல்லா ஓட்டைகளிலும் செக் செய்தான். ''யோவ் நான் பேண்ட் சட்டை போட்டிட்டிருந்தேன்யா'' என்று கத்தினான் ராஜன். கத்தும் போது வாயில் இருந்த சுவிங்கத்தை பார்த்தவன் ''வாயை திற. அதை துப்பு'' என்றான்.

''சார். இது வெறும் சுவிங்கம்''

''இருக்கட்டும் துப்பு.'' என்று டேபிளின் மேல் துப்பச் சொன்னான். ராஜன் துப்பினான். நன்கு கடித்து துவைக்கப்பட்ட சுவிங்கம். கையில் கர்சீப்பை வைத்து அந்த சுவிங்கத்தை டேபிளின் மேல் வைத்து கை விரலால் நசுக்கிப் பார்த்தான். அது விரிந்தது. உள்ளே வந்தவரைப் பார்த்து உதட்டை பிதுக்கினான். லைனில் இருந்த பாயிடம் ''இல்லை பாய் என்ன பண்ண?'' என்று வினவினான். ''சரி பாய். சரிபாய்.'' என்று தலையாட்டி போனை வைத்துவிட்டு, ''ரூம் பூராவும் செக் பண்ணு. அது வரைக்கும் ட்ரஸ் இல்லாம இவர வேற ரூம்ல அடைச்சு வை'' என்றான். பாடிகார்டுகள் ராஜனை நோக்கி வந்தார்கள். ''ஹலோ.. நீ பண்றது அராஜகம். நான் ஏதுவுமே பண்ணலை. என்னை ஏன் பிடிச்சு வைக்கிறீங்க. நீங்க போலீசை கூப்பிடுங்க.. போலீசை கூப்பிடுங்க'' என்று கத்திக் கொண்டிருக்கும் வேளையில் ரூம் கதவு தட்டப்பட, அதே நேரத்தில் மேனேஜரின் போனும் ரிங்கடிக்க ''என்னது போலீசா?'' என்று அதிர்ந்து உள்ளே வந்தவனின் முகத்தைப் பார்க்க, கதவு ஓங்கி தட்டப்பட்டது.

# 39. நான்

இம்முறை கதவு தட்டப்படவில்லை. உடைக்கும் முடிவுக்கு வந்து இடிக்கப்பட்டது போல இருந்தது. உள்ளே இருந்தவர்கள் முகத்தில் கலவரம் அதிகமானது. டேபிளின் மேல் இருந்த ட்ரேவையும், வெல்வெட் பாக்கட்டையும் மேனேஜர் உள்ளே வந்தவனிடம் கொடுக்க, “யோவ் இதை மறை மறை” என்று கிசுகிசுத்தான். அந்த அறையில் மறைப்பதற்கு எந்தவிதமான ரேக்குகளோ, சுவரில் துளைகளோ இல்லை. காலி அறை. நடுவே ஒரு லைட். டேபிள், சோபா. அவ்வளவுதான் வேறு வழியில்லாமல் மேனேஜர் வந்தவனின் பேண்ட் பேக்கட்டில் சொருக, அதை மறுக்க முயற்சித்துக் கொண்டிருக்கும் போதே “சார்.. காப்பாத்துங்க. காப்பாத்துங்க” என்று நான் கத்த ஆரம்பித்தேன். என் சத்தம் வெளியே கேட்ட மாத்திரத்தில் கதவு ஓங்கி இடிக்கப்பட, பதட்டத்துடன் பாடிகார்டில் ஒருவன் படாலென கதவைத் திறந்து வெளியே ஓடப்பார்த்தான். வெளியே ஒரு படையே இருக்கும் என்று அவனுக்கு தெரியாததால் வெளியேறிய நொடியில் மாட்டினான்.

உள்ளே நுழைந்த போலீஸ் படை என் நிர்வாண நிலையைப் பார்த்து உடனடியாய் டேபிள் மேல் இருந்த உடைகளை எடுத்துக் கொடுக்க “உங்க இடத்துல கடத்து வைரங்களை பதுக்கி வைச்சிருக்கிறதா தகவல் வந்திருக்கு. உங்களை செக் பண்ணலாமா?” என்றார் இன்ஸ்பெக்டர்.

அடுத்த நாள் மீடியா பூராவும் பிரபல நகைக்கடையில் கடத்தல் வைரங்கள் என்று அலறியது. கடை ஓனர் வெளிநாட்டிலிருந்து அரசியல் காழ்புணர்ச்சி என்று அறிக்கை விட, நூறு கோடிக்கும் மேற்பட்ட கணக்கில் வராத வைரங்களும், சில கோடிக்கு தங்க, ப்ளாட்டினம் நகைகளையும் போலீசார் கைபற்றியுள்ளனர் என்ற தொடர் செய்திகளால் பரபரத்தது.

மீடியாவில் என் பெயர் வெளியே சொல்லப்படவேயில்லை. இவ்வளவு பெரிய நிறுவனத்தின் மேல் வந்த ரகசிய தகவலை மட்டுமே அடிப்படையாய் வைத்து,

தொடர் விசாரணை செய்து, இந்த நகைக்கடை பதுக்கல் மட்டுமே இல்லாமல், இத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் பல வெளிநாட்டு ஆட்கள், ப்ரோக்கர்கள் என நாற்பதுக்கும் மேற்பட்ட ஆட்கள் கைது செய்யப்பட்டார்கள். மொத்த நெட்வொர்க்கே கலகலத்துப் போனது. தாவூத் இப்ராகிம் வரை தொடர்பிருப்பதாய் சொல்லப்பட்ட நகை கடை நிறுவனம் இன்கம்டாக்ஸிலிருந்து இந்திய அரசின் எல்லா டிபார்ட்மெண்டு ரெய்டும் ஒரு சேர நடைபெற ஆரம்பித்து கதி கலங்கி போனது.

சென்னைக்குள்ளேயே பாதுகாப்பான இடங்களில் ஒரு வாரம் தங்க வைக்கப்பட்டிருந்தேன். என்னைக் கூட்டிப் போகும் போதும் கண்களை கட்டித்தான் கூட்டிப் போனார்கள். ரெண்டு நாட்களுக்கு ஒரு முறை நான் இடம் மாற்றப்பட்டேன். ஒரு வாரம் கழித்துத்தான் நான் வெளியே விடப்பட்டேன். ‘போலீஸ் உன்னை பின் தொடர்ந்து வாட்ச் செய்து கொண்டேயிருக்கும்.’’ என்றார்கள்.

வெளியே வந்த மாத்திரத்தில் நான் நேராய் என் அக்கா வீட்டிற்குப் போய் உடைகளை எடுத்துக் கொண்டு பாண்டிச்சேரி போனேன். அங்கே ஒரு ரெஸார்ட் எடுத்து தங்கினேன். ரெசார்டின் லாபியிலிருந்த போனிலிருந்து ஷர்மிக்கு போன் செய்து விழுப்புரம் வந்து போன் செய் என்று ஹோட்டல் இன்சார்ஜில் இருப்பவரின் செல் நம்பரை கொடுத்தேன். அடுத்த மூன்று மணி நேரத்தில் விழுப்புரம் வந்து போன் செய்தாள். இன்சார்ஜ் ஹோட்டல் அட்ரசை சொல்லி வரச்சொன்னார்.

வாசலிலேயே காத்திருந்தேன். பார்த்த மாத்திரத்தில் ஓடி வந்து கட்டிப் பிடித்துக் கொண்டாள். லாபியிலிருந்த இன்சார்ஜ் பார்த்துவிட்டு சிரித்தபடி தன் வேலையை தொடர்ந்தார். கட்டிப்பிடித்தவள் அழுதபடியே இருக்க, மெல்ல அவளை அறைக்குள் அழைத்துச் சென்றேன். கொஞ்சம் நேரம் ஏதும் பேசாமல் அமைதியாய் இருந்தாள். “பீர் சாப்பிடுறியா?” என்று கேட்டேன். முதுகில் அடித்து சிரித்தாள். “நான் எவ்வளவு கவலைப்பட்டு கிடந்தேன் பீர் சாப்புடுறியான்னா கேக்குறே?”

“பின்ன வந்ததுலேர்ந்து பொண்டாட்டி மாதிரி அழுதுட்டே இருக்க?” என்று சிரித்தேன். அவள் அதற்கு ரியாக்ட் ஆகவில்லை.

‘‘இந்த ஒரு வாரம் நான் தூங்கல. உன்னைப் பத்தின எந்த தகவலும் இல்லை. ரெய்ட் மேட்டர் வெளிய தெரிய ஆரம்பிச்சதும் அம்சவள்ளிகிட்டேயிருந்து மட்டும் ஒரே ஒரு மெசேஜ். எனி நியூஸ்னு. தட்ஸால். வைரத்துக்கு போன் பண்ணேன். நியூஸ் வந்த அடுத்த நிமிஷம் சித்தார்த் அவன் ஆளுங்க எஸ்சாயிட்டங்களாம். வைரம் ஒரு வாரம் பூரா அவனுங்க வச்ச கொக்கெயினை தேடி நொந்து போய்ட்டான். கடைசில சுவிம்மிங் பூல் உள்ள தண்ணி வர பொந்துல அடைச்சி வச்சிருந்திருக்காங்க. அதை என்ன பண்றதுன்னு கேட்டான். எனக்கும் ஒண்ணும் புரியலை. பேசாம பூமில பொதைச்சு வச்சிருனு சொல்லிட்டேன்.

சரி.. என்ன ஆச்சு? இப்ப என்ன பண்ணுறது?. இந்த ப்ளானை நம்பி பல லட்சம் செலவு பண்ணியிருக்கான் சித்தார்த். அது புட்டுகிட்டதுனால நம்மளுக்கு ஏதாச்சும் பிரச்சனையா?. திரும்ப வருவானா? எப்படி நாம அதுலேர்ந்து தப்பிக்கிறது?’’ என கேள்விகளால் துளைத்தாள் ஷர்மி.

‘‘ஒண்ணும் பிரச்சனை வராது’’

‘‘எப்படி?.’’

‘‘என்னை நம்புறியா இல்லையா?’’

‘‘நம்புறேன்’’

’’அப்புறம் சும்மா இரு. எல்லாம் முடிஞ்சிருச்சு. இனி எவனும் வர மாட்டான். கொஞ்ச நாளைக்கு நாம ஆஸ்யூஷுவல் நார்மாலிட்டிய மெயிண்டெயின் பண்ணு. ஒரு வாரம் பத்து நாள்ல நான் திரும்ப வந்திருவேன்.’’

ஷர்மி என்னைக் கட்டிக் கொண்டு கண்களில் நீர் தளும்ப, ‘‘நிஜமாவே சரியாயிருமா?’ என்றாள்.

அவள் நெற்றியில் முத்தமிட்டு ‘‘ஷுயூர்’’ என்றேன்.

‘‘நீ இந்த விஷயம் ஆரம்பிச்சிதலேர்ந்து ரொம்பவே கூலா இருக்கே? எப்படி?’’

நான் நீண்ட பெருமூச்சை இழுத்து விட்டு ‘‘அப்படியா?’’ என்றேன்.

’’ஏதோ ஒண்ணு இருக்கு சொல்லக்கூடாதுன்னு முடிவு பண்ணியிருக்கே. குட். நான் இன்னைக்கு மட்டும் உன் கூட இருக்கவா?’’ என்ற அவளின் குரலில்

கெஞ்சல் இருந்தது.

“ரூமை விட்டு வெளிய போக முடியாது பரவாயில்லையா?”

ஷர்மி என்னை அணைத்து “உன்னையே சுத்திப் பார்த்துக்குறேன்” என்று அணைத்தாள். ஆதரவாய், நம்பிக்கை தரக்கூடிய விதமாய் அவளை அணைத்துக் கொண்டேன். உள்ளுக்குள் மட்டும் மனம் படபடத்துக் கொண்டிருந்தது.

# 40. ஒரு ப்ளாஷ்பேக்

''என்ன ராஜா கூப்பிட்டாலே பிஸி பிஸினு சொல்லுறவன் நீயே கூப்ட்டு விட்டிருக்க? என்ன வேணும்?'' என்ற கமிஷனர் மனைவியை மிகுந்த காதலுடன் பார்த்தேன்.

''நான் ஒரு பிரச்சனையில மாட்டியிருக்கேன்.'' என்று பார்ட்டியில் ஆரம்பித்து, சித்தார்த்தின் திட்டம் வரை விவரமாய் சொன்னேன். ஆர்காசத்தில் கூட இத்தனை மெய்மறந்து அவள் இருந்ததில்லை. வாய் பிளந்து கேட்டுக் கொண்டிருந்தாள். ''நிஜமாவே இப்படியெல்லாம் பார்ட்டி நடக்குதா?'' என்ற அவளின் கேள்வியில் ஆச்சர்யமும், ஏக்கமும் இருந்ததை உணர்ந்து, அப்படியே விட்டால் பேச்சு வேறு திசையில் போய் அடுத்த ரவுண்டுக்கு தயாராக வேண்டிய சூழ்நிலை வந்துவிடும் என்பதால் “இதுலேர்ந்து வெளியே வர எனக்கு ஒரு ஐடியா இருக்கு. நீங்க நினைச்சா.. உங்க வீட்டுக்காரரை வைச்சு எனக்கு ஹெல்ப் பண்ணலாம். அதே நேரத்துல அவருக்கும் பெரிய பேர் கிடைக்கும் என்னா சொல்றீங்க?'' என்று கெஞ்சலாய் கேட்டேன்.

அடுத்த சில நிமிடங்கள் அவள் கமிஷனருடன் போனில் பேசிக் கொண்டிருந்தாள். அவருக்கு எங்கள் விஷயம் தெரியும். ஏற்கனவே என்னை ஒரு போலீஸ் கேஸிலிருந்து விடுவித்திருந்ததைப் பற்றி உங்களிடம் சொல்லியிருந்தேன். அதனால் உடனடியாய் அவரது அலுவலகத்திற்கு வரச் சொல்லி டீடெயிலாய் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டார். அடுத்தடுத்து என்ன ப்ளான்? என்று பேசினார்.

யாருக்கும் சந்தேகம் வராத படி சித்தார்த்தின் ஸ்க்ரீன் ப்ளேயில் செயல்படுவது என்றும், அதற்கு நான் கொடுக்கும் தகவல்கள் எல்லாவற்றையும் வைத்து பின்னணியில் செயல்படும் நெட்வொர்க்குகளை அடையாளம் காணும் ப்ரச்சனையை தான் பார்த்துக் கொள்வதாகவும் மிகவும் ஆர்வத்துடன் சொன்னார்.

அவரது குரலில் ஒரு எக்காளம் இருந்ததற்கு காரணம் இருக்கிறது. அந்த நகைக்கடை நிறுவனத்திற்கும் இவருக்குமிடையே ஓர் இல்லீகல் நகை கொடுக்கல் வாங்கல் பஞ்சாயத்து. தலையிட்டு பேசியதற்கு சி.எம் செல் வரை இன்ப்ளுயன்ஸை காட்டினான் இந்திய ஓனர். இரண்டு பக்கமும் அவமானமாகிப் போய் இருந்தவருக்கு இது அல்வா. தன் ப்ளான் படி நடந்தால் இது பெரிய கேஸ். இண்டர்நேஷனல் லெவலில் ஆட்கள் மாட்டுவார்கள் என்பது நிச்சயம். மீடியாவும் அத்தனை சீக்கிரம் மறக்காது. மறக்காமல் வைப்பது எப்படி என்று அவருக்கு தெரியும். பிரச்சனையை சமாளிக்க போனில் கூட பேசாமல் அலைக்கழித்த ஓனரை எப்படி அலைக்கழிக்க வைக்கிறேன் பார் என்று அவர் கொக்கரித்து என்னை இறுக அணைத்துக் கொண்டார். அவரது அணைப்பில் வித்யாசமிருந்தது.

எந்த நிமிடத்தில் அந்த கடையில் நுழைகிறேனோ அதிலிருந்து என் போனை ஜிபிஎஸ்ஸில் ட்ரேஸ் செய்து கொண்டேயிருப்போம் என்று சொல்லியிருந்தார். எல்லாமே அவர் சொன்னபடி நடந்தேறியது. அங்கு நான் அடிவாங்குவேன் என்று எதிர்பார்க்கவில்லை. கொஞ்சம் முன்னாடி வந்திருக்கலாம். இதுவெல்லாம் எனக்கு முக்கியமல்ல. அந்த வைரத்தை எப்படி கொண்டு வருவது என்பதில்தான் பதட்டமே?.

என்ன வைரத்தை கொண்டு வருவதா? என்று நீங்கள் ஆச்சர்யப்பட்டீர்களானால், ஆம் வைரத்தைத்தான். சித்தார்த்தின் திறமையான ப்ளானிங் தான் அதற்கு காரணம். சி.சி.டி.வி கேமராவின் சுழற்சி வலதிலிருந்து இடது பக்கம் போய் வர எடுத்துக் கொண்ட 40 செகண்டுகள். ஒரு பக்கம் திரும்பி முடிந்ததும் சட்டென வலது பக்கம் போய்வரக் கிளம்ப சில நொடிகள் எடுத்துக் கொள்கிறது என்பதை கண்டு பிடித்திருந்தான்.

ஏற்கனவே சொல்லியிருந்தேன். அந்த அறை மிக குறைந்த லைட்டிங் செய்யப்பட்டிருந்தது என்று. டேபிள் டாப் லைட் நடுவில் டேபிள் எதிர் எதிர்புற சோபாக்கள். வாடிக்கையாளர் தன் பக்கம் ட்ரேயை நகர்த்தி லோப்சை கண்ணில் மாட்டிக் கொண்டு நெருக்கிப் பார்த்துக் கொண்டே ஒரு முறை கேமராவை பார்த்தேன் என் கவனம் சிதறியதனால் அவர்களும் சிதறினார்கள். இடதிலிருந்து வலது திரும்பும் சில நொடிகள் தான் என் வாயிலிருந்த சுவிங்கத்தை கையில் எடுத்து ட்வீஸரிலிருந்த வைரத்தை எடுத்து அதில்

வைத்து மீண்டும் வாயில் போட்டுக் கொண்டேன். இதற்கிடையில் ட்வீசரை ட்ரேயின் மீது வைத்துவிட்டேன்.

சுவிங்கத்தை செக் செய்ய வேண்டும் என்று மேனேஜர் கேட்ட போது உள்ளே நுழையும் போது சுவித்த சுவிங்கத்தை கொடுத்தேன். வைரத்தை பார்க்கப் போன போது சாப்பிட்ட சுவிங்கத்தில்தான் வைரத்தை கடைவாயில் வைத்திருந்தேன். பாடி கார்ட் கொடுத்த அறையில் ரத்தத்தோடு வைரமும், சுவிங்கத்தோடு உள்ளே போனது எதிர்பாராதது அடியைப் போல.

வயிற்றுக்குள் போன சுவிங்கமும் வைரமும் என்ன செய்யும் என்று எனக்கு தெரியாது. ஆனால் வயிற்றை ஒரு மாதிரி பிசைவது போல இருந்து கொண்டேயிருந்தது இனி என் நிலை என்ன? என்ற பயத்திலோ அல்லது இன்னும் இவர்கள் வரவில்லையே என்கிற எதிர்பார்ப்பிலா? என்று புரியாமல் இருந்தது.

அங்கே நடந்த அத்தனை கந்தாயங்களுக்கிடையே என்னை உடையணியச் செய்து கடையில் இருந்தவர்களை அப்புறப்படுத்தும் முன்பே கஸ்டமர்களை அப்புறப்படுத்தும் போதே அவர்களுடனேயே என்னையும் வெளியேற்றினார்கள். என் ஜாக்குவாரை அங்கேயே விட்டுவிட்டேன். போலீஸால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வண்டியில் இடம் மாற்றப்பட்டேன். ஊருக்கு உத்தண்டி தாண்டி ஒரு ஈச்சமர காட்டிற்கு நடுவில் இருந்த ஒரு பங்களாவில் தங்க வைக்கப்பட்டேன். கமிஷனர் மனைவியுடன் வந்திருந்தார். அவர் கண்களில் என்னைப் பார்க்கும் போதெல்லாம் ஒரு பளபளப்பு இருப்பதாய் பட்டது.

‘‘வைரத்தை எங்கே ஒளிச்சு வச்சிருக்க? போரன்சிக் ஆட்கள் போகுறதுக்கு முன்னாடி அதை எடுக்கணும் சொல்லு? ‘என்றார் ஆர்வமாய்.

‘‘சார்… ’’என்று இழுத்தேன்

‘‘என்னாச்சு?’’ என்று பதட்டப்பட்டார். சொன்னேன்.

ஹாஹா என சிரித்தார். ‘‘நோ ப்ராப்ளம். நீ கொஞ்சம் கோவாப்ரேட் பண்ணா சரியாயிரும்’’ என்றவர் நார்கோடிக்ஸ் டிபார்ட்மெண்டில் உள்ள் தன் சகாவை அழைத்து பேசினார். எதிர்முனை ஆள் ஏதோ ஒரு மருந்து பெயர் சொல்ல, ‘‘வாட்சப் செய்திரு’’ என்றவர். பங்களா வாட்ச்மேனிடம் சொல்லி

மாத்திரையை வாங்கி வரச் சொன்னார். மாத்திரை சாப்பிட்ட அரை மணியில் வயிறு கலங்கியது. “கஷ்டம், அசூயை பாக்காம பாத்டப்புல டிரைன் பாயிண்ட அடச்சிட்டு, கக்கா போயிட்டு வா. நிச்சயம் வைரத்தோட அது வெளிய வரும். எடுத்துக் கொடுத்துரு” என்றார் முகம் சுளித்தபடியே. வேறு வழியில்லை அவர் சொன்னதைப் போலவே செயல்பட்டேன். மாத்திரையின் காரணமாய் நீராய்த்தான் வெளியேறியது. ஒரு விதத்தில் சுவிங்கத்தை கண்டு கொள்ள ஏதுவாய் இருந்தது. என் மலத்தை தொட எனக்கே ஒரு விதமான அருவருப்பு இருந்ததை நினைத்த போது துப்புறவு பணியாளர்கள் நினைவுக்கு வந்தார்கள்.

பூமியின் ஆழத்திலிருந்து கரியாய் வந்தாலும், கக்காவாவிலிருந்து வந்தாலும், வைரம் வைரம் தான் என்று கமிஷனரும், அவரது பொண்டாட்டியும் இடது கையால் அதை வாங்கி உள்ளங்கையில் உருட்டும் போது புரிந்தது. “உன் ஷேர் எல்லா பிரச்சனைகளும் முடிந்த பின் வரும். என்ன?” என்று அங்கிருந்து கிளம்பினார்கள். கிளம்பும் போது கமிஷனர் தயக்கமாய் என்னிடம் வந்து, என்னை அணைத்து, காதோரமாய் “நாம ஒரு நாள் தனியா சந்திக்கணும்” என்று கன்னத்தில் முத்தமிட்டு சென்றதை அவரின் மனைவி பார்த்துக் கொண்டிருந்தாள். அவர்கள் இருவருக்குமிடையே உள்ள புரிந்தல் இப்போது புரிந்தது.

# 41. க்ளைமேக்ஸ்

மூன்று மாதங்களில் எல்லா மீடியா பரபரப்பும் அடங்கி, மொத்தமாய் மறந்தே போனார்கள். மீண்டும் அதே கடையை டிவி விளம்பரங்களில் பிரம்மாண்டமாய் காட்டிக் கொண்டிருந்தார்கள். கடை ஓனருக்கும் கமிஷனருக்கும், சம்பந்தப்பட்ட துறை அமைச்சருக்கும் நெருக்கம் ஏற்பட்டு, பிரச்சனை சுபமாய் செட்டில் செய்யப்பட்டதாய் சொன்னார்கள். தேவையேயில்லாம் மாட்டிய இடைதரகர்கள் மட்டும் ஜெயிலில்.

சித்தார்த் மீண்டும் அம்சவள்ளி மூலமாய் ஒரு முறை துபாயிலிருந்து தொடர்பு கொண்டான். "என்ன நடந்திச்சு?" என்று கேட்டான். நான் போனை கட் செய்துவிட்டு, அம்சவள்ளியிடம் "இதோ பார் என் போன் கண்காணிக்கப்படுகிறது. அதனால் நோ கம்யூனிகேஷன். அப்புறம் ஒரு விஷயம். அன்றைக்கு எதுவுமே நடக்கலை. அதுக்குள்ளத்தான் போலீஸெல்லாம் வந்து எல்லாம் கொளாப்ஸு. நீயும் கொஞ்ச நாளைக்கு என்னை காண்டேக்ட் பண்ணாத" என்றதிலிருந்து அவள் என்னை தொடர்பு கொள்வதை நிறுத்தியிருந்தாள்.

கமிஷனர் மனைவியின் மூலமாய் என்னுடைய பங்காய் வந்த பத்து "கே"வை கேஷாய் கொடுத்திருந்தாள். அவளே அதை எப்படி லீகலாய் கணக்கில் கொண்டு வர செய்யும் தகிடு தத்தங்கள் செய்யும் ஆட்களையும் அறிமுகப்படுத்தி வைத்திருந்தததினால் யாருக்கும் தெரியாமல் ஈஸியா செட்டில் ஆனது. எப்படி என்று புரிந்து விளக்க ஆரம்பித்தால் ரெண்டு நாவல் எழுதலாம் அத்தனை விஷயங்கள் அதில். வெளியுலகுக்கு நானும் ஷர்மியும் இன்னமும் பார்ட்டிகளில் கலந்து கொண்டுதானிருக்கிறோம். எங்களது வருமானம் அதில் தான் என்பதை நிறுவிக் கொண்டிருந்தோம்.

ஒரு பொத்திக் ஆரம்பித்தோம். மெல்ல தொழிலிருந்து விலகி செட்டிலாகப் போவதாய் செய்தியை பரவவிட்டோம். ஷர்மியிடமிருந்த நிஜமான டிசைனிங்

திறமை எங்களது பொத்திக்கை பிரபலமாக்க, ஏற்கனவே எங்களுக்கு இருந்த ஹைஃப்ரோபைல் காண்டேக்டுகள் எங்களுக்கு சாதகமாய் இருந்தது. இன்று சென்னை மட்டுமில்லாமல் துபாய், சிங்கப்பூர் என பறந்து கொண்டிருக்கிறோம். கமிஷனருக்கும், அவரது மனைவிக்கும் நான் எப்போதும் அவெயிலபிளாய் இருக்க வேண்டியிருந்தது. அதே போல ஷர்மிக்கும் ஒரு சில ஹைஃப்ரோபைல் ஆட்கள். எங்களை தக்க பல பிரச்சனைகளிலிருந்து காக்க அது தேவையாயிருந்தது. மொத்தமாய் வெளியே வர எங்களது திருமணம்தான் ஒரே வழி என்று முடிவெடுத்து ஊரறிய திருமணம் செய்து கொண்டோம்.

''என்ன எழவு இது முதல் ராத்திரி செட்டப் எல்லாம்?'' என்று சிரித்தேன்.

''அபீஷியலாம்''

''நமக்கு எல்லாம் முதல் ராத்திரிங்கிறது எதுன்னு நினைப்பே இல்லை.'' என்றேன்.

''எனக்கு இருக்கு''

'எப்ப?''

''என் வீட்டுல.. எனக்கும் உனக்கும். சித்தார்த் பிரச்சனையின் போது நியாபகமில்லை?''

யோசித்து ''ஆங்' என்றேன்.

''திரும்பவும் கேட்குறேனு கோச்சிக்காத. எதுனால என் மேல உனக்கு அவ்வளவு நம்பிக்கை. காதல்.?''

''தெரியலை. பல விஷயங்களுக்கு ஆன்சர் கிடைக்காம இருக்குறதுதான் சுவாரஸ்யம். லெட்ஸ் என்சாய்'' என்று ஷர்மியை அணைத்தேன். வாட்சப் மெசேஜ் சத்தம் வர, அவளை அணைத்தபடி எடுத்துப் பார்த்தேன். ''வாழ்த்துக்கள் – சித்தார்த் ''என்று ஒரு புதிய நம்பரிலிருந்து மெசேஜ் வந்திருந்தது. யோசனையாய் அதை பார்த்துக் கொண்டிருந்த போது, ஷர்மி அவளின் முகத்தை என் தோளில் புதைத்து, மேலும் என்னுள் அவளை புதைத்துக் கொண்டே ''யார்? என்ன மெசேஜ்?'' என்றாள்.

''சும்மா வாழ்த்து மெசேஜ் நம்ம மேரேஜுக்கு'' என்று போனை அணைத்துவிட்டு,ஷர்மியை அணைத்தேன்.

@@@@@@@@@@@@@@@@@@@